பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 21 | வியாழக்கிழமை | (04-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 76

### சந்திரிகாவின் தலையணைக்குக்கீழ் பாம்பும் இருக்கலாம்

# ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்

## அநுரா பண்டாரநாயக்கா அறிவிப்பு



(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி சார்பாகத் தான் போட்டியிடப்போவதாக அக் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.**

**அரசியலில் நானே பண்டாரநாயக்கா வம்சத்தின் கடைசி நபர். என்னுடன் இக்குலம் முடிவடைந்து விடும். ஜனாதிபதியின் பிள்ளைகள் அரசியலில் ஈடுபட்டாலும் அவர்கள் பண்டாரநாயக்கா குடும்பத்திற்குச் சொந்தமானவர்கள் அல்ல. அவர்கள் குமாரதுங்க குடும்பத்திற்குரியவர்கள் என அநுரா பண்டாரநாயக்கா கூறினார்.**

கடந்த வாரம் அனுராதபுரத்தில் இக்கூட்டணியின் முதல் நாள் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு மக்களின் ஆணை வேண்டும் என பேசியிருந்தார். கடந்த 1994முதல் 10 வருடங்களுக்கு மேலாக நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தினை சந்தோசமாக ஜனாதிபதி அனுபவித்துவிட்டுப் பின்னர் ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக மீண்டும் பாராளுமன்றத்திற்கு வர ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கையில் அநுரா பண்டாரநாயக்கா பின்வருமாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தான் எத்தகைய் திட்டங்களை வைத்திருக்கிறார் என்பது பற்றி எனக்குத் தெரியாது. சிலவேளைகளில் ஜனாதிபதியின் தலையணைக்குக் கீழ் பாம்புகளும் இருக்கக்கூடும். நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றக் கதிரைகள் தமிழர்களுக்கு ஒருபோதும் விடிவைத் தரப்போவதில்லை

### புலிகளின்குரல் பொறுப்பாளர் ஜவான்

(கொழும்புத்துறை)

பாராளுமன்றக் கதிரைகள் தமிழர்களுக்கு எந்த விடிவையும் பெற்றுத்தரப்போவதில்லை என்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இவ்வாறு புலிகளின்குரல் வானொலிப் பொறுப்பாளர் ஜவான் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவான தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமான காலம்முதல் பொதுத் தேர்தல் ஒன்றை யுத்தகாலத்தில் தான் தமிழ்மக்கள் சந்தித்தனர். ஆனால், இன்று அத்தகையதொரு நிலைமை காணப்படவில்லை. சமாதானத்தில் தமிழ்மக்கள் இத்தேர்தலை எதிர்கொள்கின்றனர். இம்முறை நடைபெறுகின்ற தேர்தல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச மீண்டும் மக்கள் ஆணை தேவையா?

### அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு மீண்டும் மீண்டும் மக்கள் ஆணையைப் பெற வேண்டுமா என காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் இரு வேட்பாளர்கள் நேற்று இராஜினாமா செய்தனர்

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களில மேலும் இருவர்நேற்று இராஜினாமாச் செய்துள்ளனர்.

தலைமைவேட்பாளரான வெப்டிஸ் பெர்னாண்டோ மற்றும் அரசரத்தினம் மனோகரன் ஆகிய இருவருமே நேற்று இராஜினாமாச் செய்தவர்களாவர்.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் தான் விலகுவதாக தலைமை வேட்பாளரான வெப்டிஸ் பெர்னாண்டோ தேர்தல் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினர் மீதே ஜனாதிபதிக்கு நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி தனது சொந்தக் கட்சி உறுப்பினர்களைவிட ஜே.வி.பி மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளார் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் கடந்த திங்கள் அன்று தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது ஜே.வி.பி. உறுப்பினரும், கூட்டணி வேட்பாளருமான பியசிறீ விஜயநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுதந்திரக் கட்சியில் பெரும்பாலானோர் ஐக்கியமக்கள் சுதந்திர முன்

(12ஆம் பக்கம் பார்க்க)


சொந்த மண்ணில் சுகவாழ்வு காண...
ஐக்கிய இலங்கைக்குள் சமாதான
சகவாழ்வை கட்டியெழுப்ப...
மத்தியில் கூட்டாட்சியுடன் மாநில சுயாட்சியை
நிலை நிறுத்தவும் அழிந்த நம் தாயகத்தை
கட்டியெழுப்பவும் மக்களே ஆணையிடுங்கள்...

X
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
(8504)


இவைாத அரசியலுக்கு எதிரான,
தன்மான அரசியலை
நிலை நாட்டிட....


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு க.சுரேஷ் பிரேமச்சந்திரன்
(8505)

# மாணவர்கள் தவறான வழியில் செல்ல அரசியல்வாதிகளே காரணமாகின்றனர்

## கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர்

(கொழும்பு)

**அண்மைக்காலமாக பல்கலைக்கழக மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது , ஈர்க்கப்படுவது அதிகரித்துக் காணப்படுகிறது. ஆயினும், மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதானது அதிகளவில் நன்மை பயக்காது.**

**பல்கலைக்கழக மாணவர்களிடையே அரசியல்வாதிகளின் செல்வாக்கு ஆதிக்கம் செலுத்துவதனாலேயே பல்கலைக்கழகங்களில் கலகங்கள் ஏற்படுவதுடன், மாணவர்களின் பட்டப்படிப்புகள்கூட குழம்பிப்போகும் நிலை தற்போது உருவாகியுள்ளது. எனவே, மாணவர்களுக்கு அரசியல் என்பது நல்வழியில் வளர்க்கப்படவேண்டும் என கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி எஸ்.எம். கைலைநாதன் குறிப்பிட்டுள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாணவரும் அரசியலும் என்ற விடயம் பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்நிகழ்வில் அதிபா திருமதி எஸ்.எம்.கைலைநாதன் தொடாந்தும் கருத்துக்கூறுகையில்,

சில அரசியல்வாதிகளின் துஷ்பிரயோகமே அரசியல் சீர்கேடுகளுக்கு காரணமாக அமைகின்றன. இவ்வாறான அரசியல்வாதிகளால் மாணவாகள் தவறான வழிகளுக்கு ஈர்க்கப்படுகின்றனர். மாணவர்களுக்கு அரசியல் என்பது தேவையற்ற ஒரு விடயம் அல்ல. நேர் வழியில் மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் அரசியல் இருக்க வேண்டும்.

அகிம்சை வழியில் போராடிய மகாத்மா காந்திஜி உலகம போற்றும் உத்தமராகத் திகழவில்லையா? இவரின் அரசியல் பிரவேசம் நியாயமான நேர்மையான அகிம்சை வழியில் இருந்தது. இது போற்றுதற்குரியது.

### அரசியல் பிரவேசம்

பாட்டுக்கொரு புலவன் ப்ாரதி. இலக்கியத்தினூடே அரசியல் சீர்கேடுகளை தனது இனிய பாடல்கள் மூலம் பாடிக்காட்டியதுடன் சமூகத்தை விழிப்படையவும் பாடுபட்டார். இதுவும் ஓர் அரசியல் பிரவேசம்தான்.

கத்தியின்றி, யுத்தமின்றி, இரத்தமின்றி நடாத்திய இவ்வாறான அரசியல் குறித்தும் கற்கும் மாணவர்கள், தற்போது கா.பொ.த.(உ/த)வில் அரசியலை ஒரு பாடமாகவும் கற்று வருவதுடன் நேரிடையாகவும் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சமூகத்தில் நடக்கும் தூய்மையற்ற அரசியலில் ஈடுபடும் அரசியல்வாதிகள் சிலரின் சந்தர்ப்பவாதங்களையும் பண பலத்தையும் பார்த்து மாணவர்கள் பண ஆசைக்கும் பதவி ஆசைக்கும் அடிமையாகி அவ் அரசியல் குறித்தே சீரழிகின்றார்கள.

பாடசாலை மாணவர்களாயினும், பல்லைக்கழக மாணவர்களாயினும் அனைவருக்கும் அரசியல் பற்றித் தெளிவான விளக்கம் இருக்க வேண்டும். எனவே, தூய்மையான அரசியல் குறித்த விரிவான விளக்கம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

இன்றைய மாணவர்கள்தான் நாளைய சமுதாயத்தின் தலைவர்கள். இவர்களை நல்வழிப்படுத்த வேணடியது ஆசிரியர்களின் கடமை. இதைவிடுத்து மாணவர்களைக் குழப்பவோ சுயமாகச் செயற்படவோ யாரும் தடையாக இருக்கக்கூடாது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் இன்ன கட்சிக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று மாணவ சமுதாயத்தை யாரும் வற்புறுத்த முடியாது அப்படிச் செயற்படவும் கூடாது.

### யாரும் ஆளலாம்

முடியாட்சி நிலவிய முன்னைய காலத்தில் பரம்பரை பரம்பரையாக ஓர் அரசனே நாட்டை ஆண்டு வந்தான். ஆனால் இன்று அந் நிலைமையில்லை. தற்போதைய குடியாட்சியில் யார் வேண்டுமானாலும் நாடடின் தலைமைத்துவத்தைப் பெறமுடியும்.

இதற்கமைய, நாளைய தலைவர்களை நாட்டுக்குச் சிறந்த முறையில் உருவாக்குவதற்கு மாணவர்களிடையே நேர்மையான அரசியல் அறிவை வளர்க்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது. அத்துடன், 18 வயதைப் பூர்த்தியடையும் முன்பு யாரும் அரசியலில் நுழைய முடியாது என்பதையும் அனைவரும கவனத்தில் கொள்ள வேண்டும். இதன்படி அனைத்து வரைமுறைகளுக்கும் உட்பட்டு நியாயமான வழியில் அரசியலில் ஈடுபடுவது ஒன்றும் தவறில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ்ப்பிரிவுத் தலைவர் எம்.கணபதிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்,

அரசியல் என்பது மிகவும் நாகரிகமான ஓர் விடயம். ஆனால் அரசியலவாதிகளிடம் அந்த நாகரிகம் காணப்படுவதில்லை. பாடசாலைகளில் அரசியலைக் கற்பிக்கும்போது ஜனநாயக வழியில் செயற்படவேண்டும். அதற்கு விட்டுக்கொடுப்பு, அன்பு, தூய்மை போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் எனப் போதிக்கிறோம்.

### சுயரூபம் அம்பலம்

ஆனால் உண்மையில் தற்போது அவ்வகையான ஓர் அரசியலை எங்கும் காணமுடியாதுள்ளது. ஒவ்வோர் அரசியல்வாதியினதும் நடவடிக்கைகளை அண்மைக்காலத்தில் நோக்குமிடத்து, அவர்களின் சுயரூபங்கள் வெளிப்படையாகத தெரிகின்றன. நேர்மையற்ற அரசியல் தற்போது நடைபெறுகிறது என்பதைக் காணலாம்.

கல்விக்கும் நடைமுறைக்கும் தொடர்பு இல்லாமல் சில அரசியல்வாதிகள் முன்னர் கற்றதற்குப் புறம்பாக, விட்டுக்கொடுக்கும் தன்மையின்றியும், நாகரிகமாகப் பேசும் முறைமை இன்றியும் ஜனநாயகத்திற்கு விதிவிலக்காக ஒருவரை ஒருவர் தாககிப்பேசுவதும் அறிக்கைகள் வெளியிடுவதுமாகச் செயற்பட்டு வருவதைக் . காணக்கூடியதாக இருக்கின்றது.

நாகாிகமாக ஓர் அரசியல் நாட்டில் இடம்பெறவேண்டுமாயின், அரசியல்வாதிகள் முதலில் பக்குவப்படுதல் வேண்டும். ஏனைய தொழில்களைப் போன்று அரசியலும் ஒரு தொழில் அல்ல என்பதை அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

சந்திரிகா தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் இருப்பது போன்று அரசியல்வாதிகளுக்கும் பதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டால் என்ன? என்று தற்போது சிலர் எழுப்பிய கருத்துக்கள் மறுக்கப்படவேண்டியவை.

ஓர் பதவியில் ஒருவரே தொடர்ந்தும் இருக்குமிடத்து, இளம் சமுதாயத்தின் கருத்துக்களும் சிந்தனைகளும் முடக்கப் படுகின்றன. அவர்களின் திறமை கள் வீணடிக்கப்படுகின்றன. இத னால் தான், அரசியல்வாதிகளும் மாற்றமடைந்து, அவ்களின் இடங் களுக்கு வெவ்வேறு இளம் தலை முறையினர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### ஜனநாயக நீரோட்டம்

ஆனால், பிழையான வழிகாட்டலில் வரும் இளம் தலைமுறையினரில் சிலரே நேர்மையற்ற அரசியலில் ஈடுபட்டு, அரசியலைத் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். இவ்வாறில்லாமல், அரசியல் நேர்மையான வழியில் முன்னெடுக்கப்படவேண்டுமெனில், அரசியலில் உண்மையும் நேர்மையும் ஆர்வமும் உள்ளவர்கள் நல்ல சிந்தனை கொண்ட மூத்த அரசியல்வாதிகளின் நெறிப்படுத்தலில் உருவாக்கப்பட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட அளவு காலமாக நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன் என்று ஓர் அரசியல்வாதி சொல்வதை விட இவ்வளவு காலம் நான் மக்களுக்குச் சேவையாற்றினேன் என்று கூறுவதே சிறப்பானது. ஓர் அரசியல்வாதி நாகரிகமாக நடப்பாரானால், அவரால் சமூகத்திற்கு நன்மை கிடைக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

அரசியல் என்பது ஓர் வாழ்க்கை முறைமை. இதில் மாணவர்கள் ஈடுபடக்கூடாது என்று சொல்லமுடியாது. சாதாரணமாக ஓர் வீட்டிலிருந்தே இந்த அரசியல் ஆரம்பத்தில் தோற்றம் பெறுகிறது. தவறான முறையில் பொறுப்பற்றுச் செயற்படும் தந்தை உள்ள குடும்பத்தில் உள்ள ஒரு இளம் பராயத்தினர் அவரது செயற்பாடுகள் பிழையானவை எனச் சுட்டிக் காட்டுகின்றனர். இது தவறல்ல.

இவர்கள் பாடசாலைக்கோ அன்றி பல்கலைக்கழகத்திற்கோ செல்லும் பட்சத்தில் அங்கு இவர்கள் காண்கின்ற, நேரிடையாக உணர்கின்ற அரசியல் துஷ்பிரயோகங்களைச் சுட்டிக்காட்டி அதற்கு நியாயம் கேட்பார்கள். இதுவும் தவறல்ல.ஆனால், பல்கலைக்கழக மாணவரிடையே தோன்றியுள்ள அரசியல் செல்வாக்குக் காரண மாகவே அண்மைக்காலமாகப் பெரும் பிரச்சினைகளும் குழறுபடிகளும் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்று வருகின்றதென்பது மறுக்கமுடியாது.

### எழுத்தறிவு வீதம் உயர்ந்தென்ன பயன்?

இலங்கையின் எழுத்தறிவு 90 சதவீதம் என்று கணிப்பிடப் பட்டுள்ளது. இங்கு எழுத்தறிவு 10 சதவீதமாக இருந்திருந்தால், இந்த நாட்டு நிலைமை இவ்வாறாகவா இருக்கும்?

அரசியல்வாதிகளிடம் நாகரிகம் இருக்கவேண்டும். இனங்களுக்கிடையே ஐக்கியப்பாடு இருக்க வேண்டும். சமயங்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கவேண்டும். கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நாட்டில் இடம்பெறக் கூடாது. புரிந்துணர்வு இருக்க வேண்டும். இவ்வாறான நிலைமைகள் இங்கு இல்லாமல் மனிதரை மனிதர் கண்டு பயப்படுகின்ற காட்டுமிராண்டித்தனமான அரசியல் இருக்கும் வரை சமாதானமும் புரிந்துணர்வும் ஏற்படுவதற்கு ஒருபோதும் சாத்தியமில்லை.

தற்போது பாடசாலைகள் எல்லாம் கல்விச்சாலைகளாக இருக்கவில்லை. அரசியல் கூடங்களாகவே மாறிவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான நிலைமை மாறவேண்டும், மாற்றப்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-18)

# ஊடகச் செயற்பாடு குறித்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் ஊடகங்களின் செயற்பாடு குறித்த பிரேரணை ஜனாதிபதி ஊடக செயலணியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய ஒரு ஊடக கலாசாரத்தை வலியுறுத்தும் வகையில் இது அமைந்துள்ளது.

நாட்டின் அரச மற்றும் தனியார்களின் ஊடகங்களை கருத்தில் கொண்டு இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரேரணையில் ஊடக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதறகு முன்னர் தேர்தல் ஆணையாளர் நாயகத்தோடு ஊடக நிறுவனங்கள் கலந்துரையாட வேண்டும்.

தேர்தல் வேளைகளில் வெளியிடப்படும் செய்திகள் பக்கச் சார்பற்ற நடுநிலையான போக்கைக் கொண்டிருக்க வேண்டும். கட்சிக் கொள்கைகளும் வேட்பாளர்களின் கருத்துக்களும் உண்மையுடையனவாக இருக்கவேண்டும்.


எல்லாத் தரப்பினர்களுக்கும் சமவாய்ப்புகளை ஊடகங்கள் இக் காலப்பகுதியில் வழங்க வேண்டி இருக்கிறது. கட்சிகளின் கொள்கைகளை ஊடகங்கள் வெளிக்காட்டும் அதேவேளை, கொள்கைகள் குறித்த மக்களின் உணர்வுகளையும் அந்த ஊடகங்கள் வெளிக்கொணர வேண்டும் என்று ஜனாதிபதியின் ஊடக செயலணி தனது பிரேரணையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கலந்துரையாடல்களின் போது பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மாறுபடும் கட்சிகளின் இணைப்பு அவசியமானது. தேர்தல்கால செய்திகளும் கலந்துரையாடல்களும் சமூக மற்றும் இன வன்முறைகளுக்கு வழி அமைக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளன. நாட்டில் நிலவும் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு குந்தகமான செய்திகளை ஊடகங்கள் வெளியிடக்கூடாது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-2)

# ஓய்வூதிய முரண்பாட்டை அனுரா தீர்ப்பாராம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்தால், ஓய்வு



பெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியம் அதிகரிக்கப்படும் என்று உறுதியளித்துள்ள அனுரா பண்டாரநாயக்க, வாழ்க்கைச் செலவின அதிகரிப்பும் பணவீக்கமும் ஓய்வூதிய அதிகரிப்பிற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றதாகச் சுட்டிக் காட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான அனுராபண்டாரநாயக்க வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகள் ஒழிக்கப்படவேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 2001ஆம் ஆண்டு இத்தகைய ஓர் முயற்சியை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது. ஆயினும், இப்பிரேரணை துரதிர்ஷ்டவசமாக தோல்வியுற்றதால் அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் , ஓய்வூதிய முரண்பாடு தொடர்ந்தும் தீர்க்கப்படாத ஒன்றாகக்காணபபடுகிறது. ஏனைய ஊழியருக்கு வழங்கப்பட்டிருப்பது போலவே ஓய்வூதியக்காரரின் சமபள உயர்வும் அவசியமான ஒன்று என்று சுட்டிக் காட்டினார். (உ-2)

### எயிட்ஸ்நோயினால் 115பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் இற்றைவரை 115 பேர் எயிட்ஸ் நோய் காரணமாக உயிர் இழந்துள்ளதுடன்,505பேர் இந் நோய்த்தாக்கத்திற்கு உட்பட்டுள்ளனர். இத்தகவலை ஐ.நா. சுகாதார ஸ்தாபனமும், ஸ்ரீலங்கா சுகாதார நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ளன.

இந் நோய்த்தாக்கத்திற்கு இதுவரை 300 ஆண்களும் 205 பெண்களும்உட்பட்டுள்ளதாக அப்புள்ளி விபரம் மேலும் தெரிவிக்கின்றது. (உ)

## சிறு விளம்பரம்

### ஆட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல குளிர்பான நிலையத்திற்கு உணவு பரிமாறுவோர் தேவை. அடிப்படைச்சம்பளமாக 4000 ரூபா வழங்கப்படுவதோடு தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:- சதீஸ் T.P. 776-176726 . (C/8418)

### மகளிர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலைகள் அனைத்திலும் எதிர்வரும் 8ஆம் திகதியன்று மகளிர்தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதுகுறித்த அறிவுறுத்தலை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட சகல பாடசாலைகளுக்கும் விடுத்துள்ளார்.(உ-3)

### பாவனைக்கு உதவாத உணவுகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக் குடபட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் மனிதப் பாவனைக்கு உதவாத காலாவதியான மற்றும் சுட்டுத்துண்டு இல்லாத பொருட்களைக் கண்டுபிடித்து அழிக்கும் பணியில் யாழ். மாநகர சபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டனர்.

கடந்த 26 ஆம் திகதி பெரிய கடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையின் போது பாவனைக்கு உதவாத பழவகைகள், உணவுப் பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு உரிமையாளர்களின் ஒப்புதலுடன் அழிக்கப்பட்டன.

இதேவேளை, பாவனைக்கு உதவாத பொருட்களை விற்போர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி எச்சரித்துள்ளார். (ச-3)

# உச்சமடைந்துள்ள வாக்குப்போட்டி வன்முறைகளுக்கு வழி வகுக்கும்

## எச்சரிக்கிறார் சட்டத்தரணி சேனாதிபதி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களம் வன்முறைகள் நிறைந்ததாகவே அமையும் என நேற்றைய தினம் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் விடியும் வேளை, நிகழ்ச்சித்தொடரில் கலந்துகொண்டு எதிர்வரும் தேர்தல் தொடர்பாக கருத்துத்தெரிவித்த சட்டத்தரணி சேனாதிபதி எச்சரித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த சேனாதிபதி,

அதிகார இழுபறியால் அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டாலும் இந்தத்தேர்தலில் இலங்கையல் இதுவரை காலமும் இடம்பெறற தேர்தல்களுள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பலராலும் உற்று நோக்கப்படுகிறது.

நீண்ட காலங்களுக்குப் பின் அமைதியானதும் யுத்தமற்றதுமான சூழ்நிலையில் மூவின மக்களும் ஆர்வத்துடன் பங்குபற்றி வாக்களிக்கும் தேர்தலாக இது எதிர்கொள்ளப்படுகிறது.

அத்துடன் இத்தேர்தலில் மக்கள் வழங்கும் ஆணையே இலங்கையின் நீண்ட கால இனப்பிரச்சினைக்கான தீர்வுகள், பேச்சுக்களை அடுத்த கட்டம் நகர்த்துதல் பற்றித் தீர்மானிக்கும்.

அந்த வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம்திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஒன்றை ஒன்று நிராகரிக்கும் கருத்து முரண்பாடுள்ள பல கட்சிகள் போட்டியிடுகின்றன.

இதனால் மக்களது ஆணையை முறைகேடாகவேனும் பெற்றுவிட வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை தோன்றியுள்ள நிலையில் பல வன்முறைகள் தோன்றக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு

இத்தகைய வன்முறைச் சாத்தியக்கூறுகள் உள்ள வாக்குச் சாவடிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். வாக்குச் சாவடிகளுக்குச் சொல்லும் வாக்காளர்களுக்கு தமது பிரதிநிதிகளைத் தொிவு செய்வதற்கான பூரண சுதந்திரம வழங்கப்படல் வேண்டும். அச்சுறுத்தல்களோ, பயமுறுத்தல்களோ இன்றி வாக்காளர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு மக்களுக்குள்ள ஜனநாயக உரிமைகளை மதித்து உரிய ஜனநாயகச்சுதந்திரம் வழங்கப்படும்போதே மக்களின் பூரண அங்கீகாரம் பெற்றவர்கள் நாடாளுமன்றில் பிரசன்னமாக முடியும்.

ஜனநாயகத்தை மதிக்கும் இந்நாட்டில் ஜனநாயகம் மதிக்கப்பட்டு வன்முறைகள் அற்ற நீதியானதும் அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஜனநாய ரீதியில் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்க பெறவிரும்பும் கட்சிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன், நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் விதமாக அமைந்துள்ள மேற்படி தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் தகுதி வாய்ந்தவர்களைத் தமது பிரதிநிதிகளாக அங்கீகரிக்கவேண்டும்.

தமது வாக்குகளை மோசடிகளுக்காகவோ, முறைகேடான விதத்திலோ பயன்படுத்தி தகுதி அற்றவர்கள் ஆசனத்தில் அமர இடமளிக்கக்கூடாது. ஒவ்வொரு வாககாளரும் நாட்டில் நன்மைகளுக்காக தமது வாக்குகளைப் பயன் படுத்தவேண்டும் என்றார். (உ-60,4)

## கொழும்பு கிறிஸ்தவ மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் யாழில்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கிறிஸ்தவ மாணவ அமைப்பைச் சேர்ந்த 7பேரைக் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

கியூடெக் ,பொது அமைப்புகள், யாழ். பல்கலைக்கழகம் போன்ற இடங்களுக்கு சென்று போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவற்றை நிவர்த்தி செய்ய பொது அமைப்புகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகள், உயர்பாதுகாப்பு வலயத்தின் மூலம் மக்களின் மீள் குடியமர்வில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக இவர்கள் கேட்டறிந்து வருகின்றனர்.

மேற்படி குழுவில் கொழும்பு சட்டக்கல்லூரி, பெரதேனியா, தென்கிழக்கு, யாழ்ப்பாணம், களனி ஆகிய பல்கலைக்கழக மாணவர்கள் அடங்குகின்றனர்.

மேற்படி குழுவினர் நேற்று முன்தினம் மாலை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் எஸ். சக்திவேல் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் பங்கு பற்றி மேற்படி பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டனர். (உ-3)

## க.கா. குழு அலுவலகம் முன் ஈ.பி.டி.பி. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மட்டக்களப்பு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது என்று மட்டக்களப்பு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கிளைப்பொறுப்பாளர் றாஸ் முஷீன் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடரும் வன்முறைகளையும் கொலைகளையும் நிறுத்தும் வகையில் செயற்படுமாறு கண்காணிப்புக் குழுவைக் கோரியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. முக்கிய உறுப்பினரின் சடலத்தை காண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன்னால் வைத்து அந்தக்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (உ-2)



# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## மூன்றாம் பகுதி

63

## திருகோணமலைத் தமிழரின் வழமைகள்

### 1.திருகோணமலை வன்னியரும் கோணேசர் கோயில் வழமைகளும்

### வழமையும் ஐதீகமும்

வன்னிபமாக நியமனம் பெற்ற தனி யுண்ணாப் பூபாலன் மதுரை நகரால் வந்தவன் என்றும், சந்திர குலத்தவன் என்றும் சொல்லப்படுவதாற் கோணேசா் கல்வெட்டுச் சோழனாகிய குளக்கோட்டன் காலத்திற்குரியதாகப் பிற்காலத்திலே பாண்டியரின் செல்வாக்கு நிலவிய காலத்தில் நடைபெற்றவொரு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகின்றதா? என்ற வினாவிற்கு இடமுண்டு. வேளைக்காறரிற் சிலர் வன்னியர் என்பதாலும், தஞ்சைப்பெருவிடையார் கோயிலின் சந்நிதானங்களையும், அதன் பல்வேறு நிலைகளையும் காவல் புரிவதற்கு முதலாம் இராஜராஜன் வேளைக்காறப் படைகளை நியமித்துள்ளமையாலும் இலங்கையிற் சோழராட்சி நிலவிய காலத்திலே புனர்நிர்மாணம் பெற்ற கோணேசர் கோயிலைப் பாதுகாப்பதற்கென்று வேளைக்காறருக்கு நியமனம் வழங்கும் ஏற்பாடுகளின் மூலம் திருகோணமலை வன்னிமை உற்பத்தியானதென்று கருதலாம்.

வன்னிபம் தொடர்பாக வழமையாக நிலவி வந்த கருத்துக்களைக் கோணேசர் கல்வெட்டு பிரதிபலிக்கின்றதென்று கருதலாம். வன்னிபத்தின் கடமைகள், பொறுப்புகள், அதிகாரங்கள் என்பன பற்றி இந் நூல் கூறுவனவெல்லாம் நாட்டு வழமைகளை அடிப்படையாகக்கொண்டவை.

ஆயினும், அந்த வழமைகளின் உற்பத்திகள் குளக்கோட்டன் செய்த ஏற்பாடுகளின் மூலமானவை என்ற கோட்பாடு மரபு வழியான ஒருகருத்தாகும்.

வன்னிபம் தனது கடமைகளை நிறைவேற்றுமிடத்துக் கோணேசர் கோயிலின் அர்ச்சகராகிய பாசுபதரான பிராமணர்கள் மீது மதிப்புடனும், பயபக்தியுடனும் நடந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தைக் கோணேசர் கல்வெட்டு வலியுறுத்துகின்றது. பாசுபதர் பற்றிய விடயங்களில் நீதி தவறினால் பிரமகத்தித்தோஷமானது முழுவமிசத்தையும் பாதிக்கும் என்ற கருத்து நூலில் வலியுறுத்தப்படுகின்றது.

நீதி பரிபாலனத்தைப் பொறுத்தவரையில் மனு நீதி பின்பற்றப்படல் வேண்டும். நீதிபரிபாலானம் பண்ணுமிடத்துத் தனிப்பட்ட கோபதாபங்களுக்கு இடமளித்தலாகாது; ஆசார சீலராய் இருத்தல் வேண்டும். பிறன்மனை நாடாதிருத்தல் வேண்டும்; மாற்றானின் மனையாளைத் தாய்போலப் போற்றுதல் வேண்டும்; பொய் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.; வாய்மையைப் பேணுதல் வேண்டும்; உண்மையானவற்றை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்; பழி வாங்கும் எண்ணங்களை மனத்திலிருந்து அகற்றுதல் வேண்டும் எளியாரைக் கருணையோடு நோக்குதல் வேண்டும். இத்தனையும் வன்னிபத்திற்குரிய பண்புகளாய் அமைதல் வேண்டும் என்பது கோணேசர் கல்வெட்டு என்பதைப் பாடிய ஆசிரியரின் கருத்தாகும் . இவ் விடயந் தொடர்பாக அவர் தனது காலத்தவரின் சிந்தனையைப் பிரதிபலிக்கின்றார் எனவும் கொள்ளலாம்.

வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதோடு தீர்ப்புகளின் பிரகாரம் தண்டனை வழங்கும் அதிகாரமும் வன்னிபத்திற்குரியதாகும். தண்டனை குற்றத்திற்கு ஏற்றதாய் அமைதல் வேண்டும். கொலைக்குற்றம் புரிந்தவர்களுக்கு மரணதண்டனை வழங்கும் அதிகாரம் வன்னிபத்திற்கு இருந்தது. வன்னிபத்தின் அதிகாரங்களும் கடமைகளும் ஆலய சேவைகளையும் ஆலயத்தோடு பந்தமானவர்களையும் அடிப்படையாகக்கொண்டே கோணேசர் கல்வெட்டிலே கூறப்படுகின்றன. கோயிற் திருப்பணிகளைமேற்பார்வை செய்து நிறைவேற்றுவதும் ஆலய வழிபாட்டையும் அதற்கு வேண்டிய சேவைகளையும் கிரமமாகச் செய்வித்தலும், வன்னிபத்தின் பிரதானமான பொறுப்புகளில் ஒன்றாகும். கோயிலுக்குப் பந்தமான நாட்டியப்பெண்கள் தவறு செய்தால் அவர்களை நிறைந்த நீரிலே நிறுத்து வைத்துத் தண்டித்தல் வேண்டும். மற்றைய பெண்கள் குற்றம் செய்தால் அவர்களைத் தலையிலே மண் கடகம் சுமந்து செல்ல வைத்து அடித்தல் வேண்டும். கோயிற் சேவகர் குற்றம் புரிந்தால் குற்றத்திற்கு ஒப்பான சவுக்கடி அவர்களுக்குரிய தண்டனையாகும்.

### கட்டுக்குளப்பற்று வன்னிபம்

கோணேசர் கோயில் தொடர்பான விடயங்களில் முதன்மை அதிகாரமும் முன்னீடும் பூபாலக் கட்டிலிருந்த பூபாலகோத்திர வன்னிபத்திற்குரியனவாகும். வழமைப்படி கட்டுக்குளம்பற்று வன்னிபத்திற்கும் ஆலய பரிபாலனத்திற் சில உரிமைகளும் பொறுப்புகளும் இருந்தன என்பதைக் கோணேசர் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது. கனகசுந்தரப் பெருமாள் என்னும் பட்டமும், ஆலயத்தில் முன்னீடும், கோயிற் கணக்குகளைப் பற்றிய பொறுப்பும் கட்டுக்குளப் பற்று வன்னிபத்தின் உரிமைகள் என்று அந்நூலிற் சொல்லப்படுகின்றது.

"இவை முதலான கோயிற் காரியங்களுள்ள பத்ததிக் கணக்கும், குளக்கோட்டன் மகாராஜா வளமைப் பத்ததியும், பெரிய கணக்கும், கல்வெட்டும், கோயிற்றொழும்புக் கதை வரலாறும், கோயிலுக்கு முன்னீடும் கட்டுக்குளப்பற்றும், நிலாவெளிப் நிந்தவூருமாகப் அந்தக் காலம் அடியேன் குடியிலுள்ளவர்களுக்குக் கிடைத்தபடியால்... அந்தக் காலம் முன்னோர்கள் எழுதி வைத்த பத்ததிப்படிக்குச் சொன்னதென்று சொன்ன வசனம்"

இவை கட்டுக்குளப்பற்று வன்னிபமான கனகசுந்தரப் பெருமாள் சொன்னவை. கோணேசர் கல்வெட்டிலே மேற்கோளாகக் கையாளப்படுபவை. அந்நூலுக்கு மூலங்களாய் அமைந்த ஏடுகளில் இருந்து பெறப்பட்டவை. அந்த ஏடுகள் காலப்போக்கில் அழிந்து விட்டன. குளக்கோட்டன் மகாராஜா வளமைப்பத்ததி, பெரிய கணக்கு, கல்வெட்டு, கோயிற்றொழும்புக் கதைவரலாறு என்னும் நூல்கள் பற்றிக்கூறப்படுகின்றது, அவையாவும் முற்காலத்திலிருந்தே கனகசுந்தரப் பெருமாளின் முன்னோர் வசமாயிருந்தன என்றும் சொல்லப்படுகின்றது. எனவே கோணேசர் கோயிலுக்குரிய ஆவணங்களும் கணக்கு வழக்குகள் பற்றிய வரையறைகள் தொடர்பான பொறுப்புகளும் கட்டுக்குளப்பற்று வன்னியர் வசமாய் இருந்தன என்று கொள்ள முடிகின்றது. ஆலய வழமைகள், கோயிலுக்குரிய சொத்துடைமைகள் என்பன பற்றிய விடயங்களை அதிகாரபூர்வமாக விளக்கும் உரிமை கட்டுக்குளப்பற்று வன்னிபத்திற்குரியன வென்று கொள்ளப்பட்டது. கனகசுந்தரப்பெருமாளுடைய அனுசரணையுடனும் ஆதரவுடனும் பூபாலகோத்திர வன்னிபம் கோணேசர் கோயிற் பரிபாலனத்தை நடாத்தவேண்டும் என்பது வழமையான நியதி என்பதைக் கோணேசர் கல்வெட்டில் உள்ள சில பகுதிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இக் கருத்திற்கு ஆதாரமாக மேல்வரும் பகுதி அமைகின்றது.

### புராதன வழமைகள்

"வரராமதேவர் முதலான எட்டு இராசாக்களும் அறை முதலாக வைத்த பொன் எம்மாத்திரமென்று கணக்கிட்டுத் திட்டம் சொல்லுதியென்னக் கருகுலக் கணக்கன் சொன்ன வசனம்.'

( தொடரும்)

## மர்மப் பொதியில் மாணவியின் படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கு முன்பாகவுள்ள துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படும் இடத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் நேற்று மதியம் வரை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட மர்மப் பை ஒன்றைப் பொலிஸார் மீட்டெடுத்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் யாழ். செயலகத்திற்கு முன்பாகவுள்ள துவிச்சக்கர வண்டி நிறுத்துமிடத்திற்கு வந்த சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர், பாடசாலை மாணவர்கள் பாவிக்கும் புத்தகப் பையை ஒத்த ஒரு கறுப்பு நிறப்பையை துவிச்சக்கரவண்டிப் பாதுகாவலரின் கண்காணிப்பில் வைத்துவிட்டுப்போனார். போனவர் போனவர்தான் நேற்று மதியம்வரை அவர் திரும்பவேயில்லை. இதனால் பொலிஸார் வரவழைக்கப்பட்டுப் பை சோதனையிடப்பட்டது.

பையினுள்ளே யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவி ஒருவரின் பல்கலைக்கழக அடையாள அட்டையும், குடையும், கோவை ஒன்றும் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (யே-19)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பான விளக்கக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது.

யாழ் மாநகர சபைப் பணிப்பாளர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (உ-3)



யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வின் போது பிரதம விருந் தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் இ.ராசதுரை விளையாட்டு நிகழ்வுகளை ஆரம் பித்து வைப்பதையும் அருகில் கல்லூரி முதல்வர் ந.சிவ கடாச்சம் நிற்பதையும்படத்தில் காணலாம்.

(படம்: எஸ்.ரீ. விமலதாஸ்)



யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்ய சாயி சமித்தியினால் கடந்த தைப்பூசத்தன்று வெளியிடப்பட்ட "தெய்வீகத் தேன் துளிகள்" என்னும் நூலின் பிரதியை வைத்திய கலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தியிடம் இருந்து வைத்திய கலாநிதி திருமதி றஞ்சி சிவபாலன் பெற்றுக்கொள்ளுகிறார்.



அண்மையில் இடம்பெற்ற தீவக வலய பண்ணிசைப்போட்டிப் பரிசளிப்பு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபால கிருஷ்ண ஐயர் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் தீவக வலயக கல்விப்பணிப்பாளர் வேணுகோபாலதாஸன், தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.கமலாகரன், தம்பாட்டி அ.த.க. பாடசாலை அதிபர் க.சுந்தரலிங்கம் மற்றும் காரைநகர் யாழ்ற் ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: ப.ஜங்கரன்)

# 3வது தமிழீழத் தேசிய விளையாட்டு விழா

# சிறப்பும், சிறப்பிக்கப்படவேண்டியவையும்

மீள்பார்வை

தஜி

**3வது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டிகளின் அடிப்படையில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்:**

**கரபந்து (பெண்) மொனிகாகுமாரி (திருமலை) கரபந்து (ஆண்) ரி.எஸ்.தவுகல (திருமலை) கபடி (ஆண்) சந்திர சேகர் (வவுனியா) வலைப்பந்தாட்டம் (பெண்) எம். சுபா ஜினி (யாழ்.) தாச்சி (ஆண்) தா.ஜெயசீலன் (கிளிநொச்சி) துடுப்பாட்டம் (ஆண்) தனஸ்காந்த (யாழ்.) துடுப்பாட்டம் (சகலதுறை) ஜனார்த்தனன் (யாழ்.) உதைபந்தாட்டம் ஜி.ஏ.டெவின்சன் (மன்னார்) உதைபந்தாட்டம் சிறந்த கோல் காப்பாளர் வசந்த தீபன் (கிளிநொச்சி).**

வடக்கு-கிழக்கின் எட்டுமாவட்டங்களையும் ஒன்றிணைத்து மூன்றாவது தடவையாக நடைபெற்றிருந்த தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை வெகு சிறப்பாக அனைவரும் போற்றத்தக்க முறையில் கிளிநொச்சியில் நடைபெற்றிருந்தது.

தமிழீழ விளையாட்டுத்துறையின் பரிணமிப்பு நிகழ்ந்து வெறும் மூன்று ஆண்டுகள் மட்டுமே கடந்த நிலையில் இவ்விளையாட்டு விழா நடைபெற்றவிதம் அவர்களது பாரிய வளர்ச்சியையே எடுத்துக்காட்டுகின்றது. சாதாரணமாக மாகாண மட்ட போட்டிகளைப் போல் அல்லாது தேசிய ரீதியான போட்டியையும் விஞ்சி சர்வதேச தரத்திற்கு இந்தப் போட்டி நிகழ்வுகளை ஏற்பாட்டாளர்கள் இட்டுச் சென்றுள்ளார்கள் என்றால் மிகையாகாது.

தொடர்ந்தும் போரினால் பல இன்னல்களையும், இழப்புக்களையும் சந்தித்திருந்த கிளிநொச்சி நகரில் இவ் விழாவினை பாரிய முன் ஏறபாடுகளுடன், மிகச் சிறந்த முறையில் நடாத்தி முடித்திருக்கின்றார்கள் தமிழீழ விளையாட்டுத்துறையினர். இப் போட்டி நிகழ்வுகளில் உதைபநதாட்டம் உட்பட வலைபந்தாட்டம் மற்றும் கரபந்தாட்டப் போட்டிகள் இரவு நேரங்களில் மின்னொளியில் நடாத்தப் படடிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## புதிய அறிமுகம்

சென்ற ஆண்டில இரண்டாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவில் இடம்பெற்றிருந்த பெரு விளையாட்டுக்களாகத் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய ஆண்களுக்கான மூன்று போட்டிகள் உட்பட பெண்களுக கான வலைப்பந்தாட்டம் என நான்கு வகையான போட்டிகள் மட்டுமே.



ஆனால் இம்முறை கபடி ஆண், பெண் மற்றும் தாச்சி ஆண், பெண் உட்பட பெண்களுக்கான கரபந்தாட்ட போட்டிகள் என மேலும் 5 வகையான பெரு விளையாட்டுக்களையும் சேர்த்து 9பெரு விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளை ஒழுங்குசெய்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் துடுப்பாட்டப் போட்டிகளை முதன முதலாக ஹாட்போல் எனப்படும் கடினப் பந்தில் விளையாடும் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாகவும் நடாத்தியிருந்தனர்.

மேலும் துடுப்பாட்டப் போட்டிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தொலைக்காட்சிப் படப்பிடிப்புகளின் மூலம் 3ஆம் நடுவரின் முறைப்பாடுகளைத் தெரிவித்து அதற்கான சமிக்ஞையை பெறும் முறையினையும் வடக்கு கிழக்கில் முதன் முதலாக நிதர்சனம் உதவியுடன் அறிமுகம் செய்திருந்தவர்களும தமிழீழ விளையாட்டுத் துறையினரே. ஆனால் இம்முறை போட்டிகளில் இம் மூன்றாவது நடுவரின் அதாவது தொலைக்காட்சி நடுவரின் செயற்பாடுகளுக்கான வசதி முறைமைகளை மேலும அதிகரித்திருந்தமையினையும் போட்டிகளின் போது காண முடிந்தது.

வளர்ந்துவரும் ஒரு துறையினை எடுத்துககொண்டால் அதன் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பது நிதி விடயமாகும். இந்நிதி தொடர்பாக- தமிழீழ விளையாட்டுத் துறையினரிடம நேரடியாக பெரும் பலம் இருபபதாகத் தெரியவில்லை. ஆனாலும் கூட அனுசரணையாளர்களையும், விளையாட்டின் பால் ஆர்வமுள்ள வர்களையும கொண்டு மிகச் சிறப்பான போட்டி நிகழ்வுகளாக இவ் விளையாட்டு விழாவினை அமைத் திருந்ததோடு, வெற்றிபெற்ற வீரர் களுக்கு பதக்கங்கள், பரிசுப் பொருட்கள் உடபட வெற்றிபெற்ற அணி களுக்குப் பணப்பரிசுத் தொகையுடன் மிகப் பெரும் பொருட் செலவில் வெற்றிக்கேடயங்களையும் வடிவமைத்து வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கவை. இவ் வெற்றிக் கேடயங்களின் வடிவமைப்பில்கூட மிகப்பெரும் கவனம் செலுத்தப்பட்டிருந்தமையினைக் காணக்கூடியதாக இருந்தது.



## சிறப்பம்சம்

இப் போட்டிகளுக்காக வடக்கு கிழக்கில் உள்ள தமிழர், முஸ்லிம் மற்றும் சிங்களவர் உட்பட அனைத்து சமூகத்தவரையும் ஒன்றிணைத்து ஒரே கொடியின் கீழ் அணிவகுத்து நிறகச்செய்துள்ளமையும், எதிர்காலத்தில் மூவின மக்களிடையேயும் நல்லதொரு உறவினை வளர்த்துக்கொளள உதவும் எனபது பெரும்பாலானவர்களின் கருத்தாகும்.

இச் சுற்றுப்போட்டிகளில் சிங்கள இன மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள். குறிப்பாக சிங்களப் படைவரர்களின் அணிகளும் இப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தன. இதில் சிங்களப் பொலிஸ் அணியைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளைக் கொண்ட திருகோணமலை மாவட்ட கரபந்தாட்ட அணிகள் வெற்றி பெற்று சம்பியன் பட்டங்களை வென்றெடுத்ததோடு மட்டும் அல்லாது அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் அம்பாறை மாவட்ட பொலிஸ் கரபந்தாட்ட அணியினரை வவுனியா சோதணைச்சாவடியில் பாதுகாப்புப் படையினர் மறித்துத் திருப்பி அனுபபிய நிகழ்வும் இடம் பெற்றிருந்தது.

இதில் குறிப்பிடத்தக்கவிடயம் என்ன வென்றால் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்படி அனுமதி பெற்றே இந்த மூன்றாவது தேசிய பெருவிளையாட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக பயணமாகியிருந்த இப் பொலிஸ் அணியினரை வவுனியா சோதனைச் சாவடியில் வழிமறித்த பாதுகாப்புப் படையினர் வன்னிக்குள் செல்வதற்கு தங்களுக்கு வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரினாலே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் இவ் உத்தரவினை மேலிடம் பிறப்பித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாக அவ் அணியினர் மீண்டும் அம்பாறைக்கே திரும்பிச் சென்றனர். இந்நிகழ்வினைப் பார்கரும்போது பல உள் நோக்கங்கள் இருந்தாலும் இந் நிகழ்வுகளை நேரடியாக குழப்ப முடியாதவர்களின் மறைமுகமான செயற்பாடுகள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தமிழீழத்தேசிய பெரு விளையாடடு விழாவினை 9 மாவீரர் ஞாபகார்த்தப போட்டி நிகழ்வுகளாகவே தொடர்ந்து நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ள தமிழீழ விளையாட்டுத் துறையினர் அதற்கான காரணத்தினைக்கூட நேரடியாக மூவின மக்களுக்கும் தெளிவுபடுத்தியுள்யனர். போரியல் முறைமைகளுக்கூடாகவே பெறப்பட்ட தற்போதைய நிலைமைகள்கூட மாவீரர்களினது தியாகங்களின் வழி வந்தவையே. அவர்களின் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் நினைவு கூரும் முகமாகவே இப் போட்டி நிகழ்வுகளை ஏற்பாடுசெய்து நடாத்தி வருகின்றதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

## பாராட்டுக்குரியவை

இம்முறை நடைபெற்ற போட்டிகளுக்காக வடக்கு-கிழக்கின் 8 மாவடடங்களில இருந்து மிகச் சிறந்த அலுவலர்களைத் தெரிவுசெய்து போட்டி நிகழ்வுகள் சிறந்த முறையல நடுநிலைமையுடனும், பாரபடசமின்றியும் நடாத் தப்பட்டிருந்தமையும் சிறப்பானவிடயம்.

இதில் சிங்கள மொழி பேசும் நடுவர்கள் மற்றும் மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்கள்கூட நடு நிலைமையுடன் இருந்ததை அநேக தமிழ் நெஞ்சஙகள் பாராட்டிப் பேசியிருந்தமையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். குறிப்பாக இந்தப் போட்டி நிகழ்வுகளுக்கான ஒழுங்கமைப்புககளும் போட்டிகள் நடைபெற்ற முறைமைகளையும் பற்றி குறிப்பிட்டுப் பேசியிருந்த சிங்கள மொழிபேசும் நடுவரான விமலசேன, தமிழ்த் தாயகம் இதுவரை கண்ட பொஙகுதமிழ் நிகழ்வுகளைப் போல இந்நாட்களில் நான் கண்ட இவ் விளையாட்டுப் போட்டிகள் ஒரு பொங்கு ஸ்போட்ஸ் நிகழ்வு என தமிழ், ஆங்கிலம் கலந்த மொழியில் குறிப்பிட்டார். உண்மையிலேயே அவர் சொன்ன விதமாகவே இப் போட்டி நிகழ்வுகள் அமைந்திருந்தன.

குறிபபாகப் பார்வையாளர்களின் எண்ணிகை எட்டு நாட்களாகவும் பெருந்திரளாகவே காணப்பட்டிருந்தது. இவ்வாறான எண்ணிக்கையில் பார்வையாளர்கள் வருகை தந்திருந்தமையும் இவ் விளையாட்டு விழாவின் சிறப்பம்சத்திற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. பார்வையாளர்களின் ஆர்வத்தையும், அவர்களின் ஆதரவு வழங்கும் முறைமைகளையும் கட்டுப் படுத்துவதில் தமிமீழ விளையாட்டுத் துறையினர் பெரும் சவால்களை எதிர்கொண்டிருந்தன. குறிப்பாக மின்னொளியில் நடைபெற்ற போட்டிகளில் இந்நிலைமைகள் அதிகமாகக் காணப்பட்டிருந்தன.

எதிர்காலத்தில் நடைபெறப் போகும் தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாக்களில்கூட இப்பார்வையாள்களுக்கான மேலதிக ஒழுங்குகளைச் செயவதன் மூலம் அதிலும் குறிப்பாக மின்னொளியில் நடைபெறும் போட்டிகளில் கூடுதலான கவனம் எடுக்கவேண்டிய தேவைகள் உள்ளன. மேலும் சர்வதேச ரீதியில் அல்லது தேசிய ரீதியில் நடைபெறுகின்ற விளையாட்டுகளுக்கு ஒரே மாதிரியான சட்டதிட்டங்களை மையமாகவைத்தே போட்டிகள் நடாத்தப்பட்டு வருவதால் எவ்வகையான பிரச்சினைகள் எழும்போதும் அதை முறைப்படி தீர்த்துக்கொள்ள முடியும் ஆனால் சில பிரதேசங்களில் மட்டுமே விளையாடப்பட்டுவரும் தாச்சிபோன்ற விளையாட்டுக்களின் விதிகளில் கூட பிரதேசத்திற்குப் பிரதேசம் ஏன் மாவடடங்கள் ரீதியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

## கவனிக்கப்பட வேண்டியவை

இவற்றையெல்லாம் தமிழீழ விளையாட்டுத்துறையினர் ஒன்று படுத்தவேண்டிய தேவை மிகப் பிரதானமான ஒன்றாகும். ஏனெனில் எமது தாயக தேசத்தில் பாரம் பரிய விளையாட்டுக்களில் ஒன்றாகக் கருதப்படும் தாச்சி விளையாட்டினை எல்லா மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான விதியில் தான் விளையாட வேணடிய தேவையும் உண்டு. அப்போதுதான் போட்டிகளின் தரமும் உயர்வடையும். மேலம் இவ்வாறான விகிமுறைகளை உள்ளடக்கியதாக பயிற்சி முகாம ஒன்றினை வடக்கு-கிழக்கு மாகாண ரீதியில் ஒழுங்குசெய்து அதனை போட்டியாளர்களுக்குப் பயனுள்ளதாக அமைக்க வேண்டும் என்பதோடு இவ் விளையாட்டிறகென நடுவர்களையும் தயார் படுத்த வேண்டிய தேவையும் தமிழீழ விளையாட்டுத்துறைக்கு உண்டு.

மேலும் போட்டிகளுக்கான அட்டவணைப்படுத்தல் நேரத்தின்படி முதல்நாள் ஆரம்ப நிகழ்வுகள் மிகச் சரியாகக் குறித்த நேரத்திற்கு



ஆரம்பமாகியிருந்தாலும், ஏனைய போட்டி நிகழ்வுகளில் பெரும்பாலானவை போட்டிநிரல் அட்டவணை நேரத்திறகுப் பிந்தியதாகவே ஆரம்பமாகி நடைபெற்றன. இதுவும் வி... க்கு ந... ன் ப... டு ஆர்வ... ருந்தனர். இதுவிடயத்திலும் தமிழீழ விளையாட்டுத் துறையினர் எதிர்காலத்தில் கூடிய கவனம் எடுத்தல் மிக அவசியமாகப்படுகின்றது.

இது தவிர மின்னொளி வசதிகளிலும், மைதானங்களைத் தயார் படுத்துவதிலும் சர்வதேச முறைமைகளைப் பினபற்றினால் போட்டி நிகழ்வுகள் மேலும் சிறப்புடையதாக அமையும் என்பதனையும் இங்கு குறிப்பிடவேண்டும். இவற்றுடன் போட்டி நிகழ்வுகள் மற்றும் கலை, கலாசாரப பண்பாட்டு நிகழ்வுகளை இவ்விழாவில் ஒழுங்கு படுத்தும்போது அவற்றிறகான மிகப் பொருத்தமான நேரங்களைக் கண்டறிந்து ஒழுங்கமைக்கவேண்டும்.

எது எவ்வாறாயினும் மிகக் குறுகிய காலத்தில் தமது இதர துறைகளைப் போலவே விளையாட்டுத் துறையிலும் தமிழன் சளைத்தவன் இல்லை என்பதை இந்த தேசத்தில் மட்டுமல்லாது வெளி உலகிற்கும் எடுத்துக் காட்டியுள்ள தமிழீழ விளையாட்டுத் துறையினரின் பணி மேலும் ஓஙக வேண்டும் எனவும், அவர்களின் செயற்பாடுகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டும் எனவும் வாழ்துகிறோம். (யே)

| தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் வழங்கப்படும் ஞாபகார்த்த சுற்றுக் கேடயங்கள் |
|---|
| லெப்.கேணல் விக்ரர் ஞாபகார்த்த சுற்றுக்கேடயம் உதைபந்தாட்டம் (ஆண்) |
| லெப்.கேணல்புலேந்திஅம்மான் ஞாபகார்த்த சுற்றுக் கேடயம் கிளித்தட்டு(ஆண்) |
| லெப்.கேணல்சந்திரன் ஞாபகார்த்த சுற்றுக்கேடயப் கபடி (ஆண்) |
| மேயர் அல்பேட் ஞாபகார்த்த சுற்றுக்கேடயம் கரபந்தாட்டம்(ஆண்) |
| கேணல் சங்கர் ஞாபகார்த்த சுற்றுக்கேடயம கிரிக்கெற் (ஆண்) |
| மேயர் சோதியா ஞாபகார்த்த சுற்றுக்கேடயம்வலைப்பந்தாட்டம்(பெண்) |
| கப்டன் அன்பரசி ஞாபகார்த்த சுற்றுக்கேடயம் கிளித்தட்டு (பெண்) |
| கப்டன் திலகா ஞாபகார்த்த சுற்றுக்கேடயம் கபடி (பெண்) |
| லெப் ரினட் சதா ஞாபகார்த்த சுற்றுக்கேடயம் கரபந்தாட்டம்(பெண்) |

# மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுக் களமாக பாடசாலைகளின் உருவாக்கம்

மாணவர்களுடைய ஆளுமை விருத்திக்கான முதற்தர களம் பாடசாலையாகும். சிக்கலடைந்துள்ள இன்றைய சமூக அமைப்பில் பாடசாலைகளின பொறுப்பு பெரிதாகிவிட்டது. அப் பணியைச் சரிவர ஆற்றும் தகைமைகள் அதிகரிக்கப்படவேண்டும். இந் நோக்கிலேயே கல்வியமைச்சின் சுற்று நிருபம் இல: 2001/16 இலங்கையின் சகல பாடசாலைகளிலும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை உளம், உடல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்கும் பாடசாலைச் சிறார்களுக்கு கல்விக் குறிக்கோள்களை எய்துவதற்கு மாறான தடைகளைக் குறித்து வெற்றிகரமான கல்விச் செயற்பாட்டின் பூரண வாய்ப்புக்களை வழங்குவதே இதன் குறிக்கோளாகும்.

"பாடசாலை ஒரு முன் மாதிரிச் சமூகம்" என்பது சமூகவியலாளர் ஓட்டாவேயின் கருத்து. சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை, சாவால்களை எதிர்கொள்ள, முகங்கொடுக்க மாணவர்களை தயார்ப்படுத்துவதுதான் பாடசாலையின் பணி. ஆனால் தற்போதைய சூழலில் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளுக்குள்ளான நிலையிலேயே மாணவர்கள் பாடசாலைக்கு வருகிறார்கள். பரஸ்பர அன்பு செலுத்தும் நிலையை இழந்த குடும்ப உறுப்பினர்கள், வாழ்க்கைப் பாதுகாப்பற்ற அச்சந்தரும் சூழல், பாடப்பரப்பை அளவிற்கதிகமாகச் சுமத்தும் பாடசாலைச் சூழல் இவற்றின் தாக்கத்தால் மாணவர்கள் அவதியுறுகின்றனர்.

போர்ச் சூழல் மிகவும் பாதகமன மனத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மனத்தாக்கங்களிலிருந்து மாணவர்களை விடுவித்து கற்றலில் முழுமையாக மாணவர்களை ஈடுபடுத்தி ஆளுமைவிருத்தியினை வழங்கவேண்டியது பாடசாலையின் பாரிய பொறுப்பாகும். பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் முன்மாதிரியான சமூகமொன்றின் உறுப்பினர்களாக அமையவேண்டியது பாடசாலையின் கடமையாகும். ஆனால் இன்றோ பாடசாலை பல்வகைப் பிரச்சினைகளுக்குரிய களமாகி மாணவர்களது கற்றல் நோக்கங்களை நிறைவு செய்வதில் தவறிழைக்கிறது என்பது பகிரங்கமான குற்றச்சாட்டாகும்.

### பாடசாலைகளின் ,ன்றைய நிலை

பாடசாலை சமூகத்தின் நம்பிக்கைக்குரிய நிறுவனம் என்ற நிலைய இழந்து வருகிறது. பொதுவாக பாடசாலை மாணவர்கள், பாடசாலையுடன் இணைந்து ஈடுபாட்டுடன் இயங்கும் சூழ்நிலை அருகிவிட்டது. பாடசாலைச் சொத்துக்களை பேணும் நிலையில மாணவர்கள் இல்லை. வன்முறை நாட்டம், பிறரை இம்சித்தல், அவதூறு பேசல், ஆசிரியரை மதிக்காத தன்மை, பெற்றோர்களின் உணர்வுகளை புரிந்து நடக்காத தன்மை, பொறுப்புணர்ச்சியின்மை இவைகள் மாணவர்கள் மத்தியில் தலைவிரித்தாடுகிறது. இந்நிலையில் பாடசாலைகள் சமூக முன்னேற்றத்தைப் பேணும் நிலையை இழந்து வருகின்றது என்ற குற்றச்சாட்டு வலுப்பெற்று வருகிறது. பாடசாலை மீது சுமத்தப்படும் இப் பாரிய குற்றச்சாட்டை செயலிழக்கச் செய்ய வேண்டிய கட்டுப்பாடு பாடசாலையுடன் தொடர்புடைய அனைவரையும் சாருகிறது. ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒருங்கிணைந்து விழிப்புடன் செயற்படவேண்டிய தேவை மிகுந்துள்ளது. பாடசாலை என்ற நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் அதிபரே இத் தகைய செயற்பாட்டை முன்னெடுக்கும் பொறுப்பை ஏற்கின்றார். அதிபரது முகாமைத்துவப் பணியில் இன்று முதன்மை பெறவேண்டியதும் வழிகாட்டலும், ஆலோசனை வழங்குதலும் தொடர்பான நுட்பங்கள் பற்றிய தேர்ச்சியாகிறது.

மாணவர்களது பிரச்சினைகளை அணுகித் தீர்க்கவும், பெற்றோருடைய பூரண ஒத்துழைப்பை பெற்று, ஆசிரியரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதிபரே முனைப்புடன் செயற்படவேண்டும. ஆனால் நடைமுறையில் பெரும்பாலான ஆசிரியர்களும் மனச்சிக்கல் அடைந்தவர்களாகவும், உள நெருக்கீட்டிற்குட்பட் டோராகவும் செயற்படுகின்றனர். ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் இடர்படுகின்றனர். மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் தடைகளை அகற்றாது வெறுமனே பாடங்களைக் கற்பிக்கின்றனர். மாணவர்களது இடர்பாடுகளைக் களைந்து கற்றல் விழிப்புணர்வைத தோற்றுவிக்கும் வழிகாட்டல் நுட்பம் பற்றி அறிந்திருந்தும் அதனை நடைமுறைப்படுத்தும் செயற்திறனை ஆசிரியர்கள் இழந்துள்ளனர். கணிப்பீடு, தொடர் மதிப்பீடு, செயற்திட்டம் என்ற புத்தாக்கச் செயற்பாட்டினை வேலைப்பழு என மனதில் கொள்ளுகின்றனர். மாணவனுக்கு நலன் விளைவிக்கும் செயற்பாடுகளை இனம் காண மறுக்கும் அளவிற்கு ஆசிரியர்களது மனோபாவம் இருள் அடைந்துள்ளது. இதனால் வகுப்பறையை நிதானமாக அவதானிக்கவும், மாணவர்களது பிரச்சினைகளை இனம் கண்டு செயற்படவும், வழிநடத்தக் கூடிய அளவிற்கு அதிபர் செயற்பாட்டு நுட்பம் வாய்ந்தவராக இருக்கவேண்டும்.

இருதசாப்தங்களுக்கு முன்னர் அதிபர்கள் பெற்றிருந்த சமூக முதன்மை இன்று அகன்று விட்டது. அன்று உரிய சமூக முதன்மை அதிபர்களுக்கு முழுமையாக அழிக்கப்பட்டிருந்தது. அதிபர்கள் தற் துணிவோடும் சுயகௌரவத்தோடும் தலைமைத்துவ செயற்பாட்டுடனும் பாடசாலைகளை வழிநடத்தினர். நிர்வாகப் பரவலாக்கல் என்ற சமீப கால முன்னெடுப்புகள் அதிபர்களது முதன்மையை அறவே நீக்கிவிட்டது. அதிபர்கள் கல்வி நிர்வாகிகள் என்போர் முன்னிலையில் தலைசாய்ந்து, வகை கூறும் தகைமை இழந்த அவல நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வகை கூறுதல் (Accountablity) என்பது தனது செயல்களுக்குத் தானே தீர்ப்பு வழங்கும் சுயாதீன செயற்திறன் ஊக்கல் நடைமுறையாகும். அதிபர் என்ற தனித்துவம் இல்லாதொழிக்கப்பட்டு அதிபர்களும் ஆலோசனைச் சேவைக்கு உட்படுத்தப்படும் இழிநிலை தோன்றியுள்ளது. இந் நிலையில் பாடசாலைகள் செயலிழந்து போவதில் ஆச்சரியம் இல்லை. இதனை நன்குணர்ந்தே கல்வியாளர்கள் அதிபர்களது சுயாதீன முகாமைத்துவம் (School Boss Management) பற்றி முன்மொழிந்துள்ளனர். பாடசாலைகளில் வழிகாட்டலும், ஆலோசனை சேவையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டின், அதிபர்களினது சுயாதீன முகாமைத்துவம் பேணப்படவேண்டும். ஒரு கால கட்டத்தில் பாட சாலையை சூழவுள்ள முழுச் சமூகத்திற்கும் அதிபர்கள் ஆலோசகர்களாக (Counsellers) விளங்கினர்.

மனித உயிரி கணிப்பை வேண்டும் உளத்தேவை கொண்டது. பாடசாலை மாணவன் பெற்றோராலும், ஆசிரியர்களாலும், சகபாடிகளாலும் நன்கு கணிக்கப்பட்ட பின் அவன் பிரச்சினைக்காளாக வேண்டிய நிலை உருவாக மாட்டாது. மாணவர்கள் வன்முறை நாட்டமுடையவராவதற்கு கணிப்பின்மையே காரணமாகும். பெற்றோர்களின் போதிய அளவு அன்பும் அக்கறையும் மிகுந்த உளப் பாதுகாப்பை வழங்குவதில்லை. இதனால் மாணவர்கள் உளம் ஈரத்தன்மையை இழந்து, வரண்டு வன்முறை நெஞ்சம் உடையதாகிறது. இன்றைய சமூக அமைப்பில் வன்முறையாளர்களே ஆற்றலும் பண்பாடுடையவராகவும் கணிக்கப்படுகின்றனர். இதனால் மாணர்கள் சூழலில்செல்வாக்குடையவராய் வன்முறை நாட்டமுடையவராகின்றனர். அவர்களது இயல்பான ஆளுமை பாதிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலைகள் விருத்திக் களமாக செயற்பட முடியாது இடர்படுகின்றனர்.

சாதாரணமாகவே பாடசாலை சமூகக் கனணப்பை இழந்துள்ளது. ஆனால் பாடசாலைச் செயற்பாடுகள் நடைமுறையில் இயல்பாகவே உள்ளன. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளது பாடசாலை அனுமதியில் தெளிவான குறிக்கோளுடன் செயற்படுவதில்லை. பாடசாலைகள் பற்றி தப்பெண்ணம் (Prejudice) உடையவர்களாக விளங்குகின்றனர். கற்பித்தல் பணியில் வெற்றிகரமான தன்மையில் இருந்து விலகிய பாடசாலைகளை முதன்மை வாய்ந்தவை என்று சமூக தப்பெண்ணத்தால் தேர்வு செய்கின்றனர். தமது பிள்ளைகளை இங்கு அனுமதிக்க விரும்பி, அதற்காகப் போராடி தமது சிறார்களின் மனதில் குழப்ப நிலையை உருவாக்குகின்றனர்.

### பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு வேண்டும

ஆகவே பாடசாலையில் உண்மைச் செயற்பாடுகள் பற்றி பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை தோற்றுவிக்கவேண்டும். பாடசாலை அமைவிடத்திற்கான சமூக நிறுவனம் என்ற செயறபாட்டை அங்கீகரிக்கவேண்டும். மாணவர்களும் பெற்றோர்களும் பாடசாலையை விளங்கிக் கொண்டு செயற்படும் போதுதான் அது மாணவர்களின் கற்றலுக்கு உகந்த சூழ்நிலையில் செயற்பட்டு மாணவர்களது ஆளுமையை வளர்க்கமுடியும். பரீட்சை முடிவுகளை மட்டும் கொண்டு பாடசாலை மதிப்பிடும் செயற்பாடு இன்று வரை வலுவிழக்கவில்லை. ஆனால் கல்விச் சீர்திருத்தங்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் எத்தகையவர்களாக வெளியேற வேண்டும் என்பது பற்றியே ஆழ்ந்த கவலை தெரிவிக்கின்றது.

வழிகாட்டலும், ஆலோசனைச் சேவை பற்றியும் கவனம் செலுத்தப்படுவதற்கு முக்கிய காரணம் உள நலம் செறிந்த, சமநிலை ஆளுமை உடையோரை பாடசாலை கள் தரவேண்டும் என்பதே ஆகும். ஆசிரியர், மாணவர் ஒவ்வொருவரிடத்தும் ஒருவகையான வளர்ச்சிக் கருமம் ஒன்றினைத் தோற்றுவிக்கிறார். மாணவர்களது உள வளர்ச்சி என்பது பெரும்பாலும் பின்பற்றுதல் (Imitation) ஊடாக நிகழ்கிறது. ஆசிரியர் திட்டமிட்ட உளவளர்ச்சி செயற்பாட்டினை மாணவரிடத்தே தோற்றுவிக்கும் பொருட்டே ஆலோசனைத் தொழில் நுட்பம் திட்டமிடப்படுகிறது. பாடப்பொருளை வழங்குவதனூடாக மாணவனை ஆளுகை விருத்தியின் பால் ஈடுபடுத்தவே இது வழிசெய்யும்.

### பாடசாலைக்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கும் உள்ள வேறுபாடு

தனியார் கல்வி நிலையங்களுக்கும் பாடசாலைகளுக்குமிடையேயான செயற்பாடுகளில் பாரிய வேறுபாடு உண்டு என்பதை சமூகம் நன்கு புரிந்துகொள்ளவில்லை. பாடசாலை முறைசார்ந்த அமைப்பு அதன் கட்டமைப்பு வலுவானது . சமூகத்தின் வலுவான விளக்கத்தால், பாடசாலைகளின் கட்டமைப்பு நலிவடைந்துள்ள போதிலும் மாணவ ஆளுமை வளர்ச்சியில் பாடசாலையின் செல்வாக்கு இன்னமும் வலுவிழக்கவில்லை. நவீன நடைமுறைகளுக்கேற்ப பாடசாலைகளின் புத்துயிர் ஊட்டும் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வகுப்பறைச் சூழல், கற்பித்தல் நடைமுறைகள், மாணவர்களின் மதிப்பீடுகள், இணைப்பாட விதான கருமங்கள் இவற்றில் பல்வேறு நவீன அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளன. ஆசிரிய வாண்மை விருத்திக்கான ஆழ்ந்த வலிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை அனைத்தும் பாடசாலையை உயிர்ப்பிக்கும் மீட்புப் பணிகளாகும் . பாடசாலை என்ற விருட்சம், சமூகம் என்ற தளத்திலேயே வேர் பரப்புகின்றது. ஆனால் முழுச் சமூகமுமே பாடசாலை என்ற நிறுவனத்தின் வளர்ச்சிப் பணியில் பங்களிக்கும் நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். உலகின் வேகமான வளர்ச்சிப் போக்கினால் மனித சமூகம் பல்வேறு தாக்கங்களுக்குட்பட்டுள்ளது. நெருக்கடியான சூழலால் யாவரும் நெருக்கீட்டிற்காளாகி உள்ளனர்.இதனால் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை நன்கு திட்டமிடப்பட்டு பாடசாலைகளில் செயற்படுத்தப்படவேண்டும் . உளவளமுள்ள மனித சமூகத்தை தோற்றுவிக்கும் களமாக பாடசாலை செயற்படவேண்டும். மாணவர் பிரச்சினைகளின் தீர்வுக் களமாகப் பாடசாலை என்ற நிறுவனத்தால் மட்டுமே வெற்றி கரமாகச் செயலாற்ற முடியும் என்ற நமபிக்கை வலுப்படுத்தும் பணியில் ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித் திட்ட முன்னெடுப்பாகும். □

கு.சண்முகநாதன்

# ஜாதிக ஹெல உறுமயவின் ஊர்வலத்திற்குத் தடை

(கொழும்பு)

நேற்று முன்தினம் களனி விகாரையிலிருந்து ஆரம்பமாக விருந்த ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் பிரசார ஊர்வலத்திற்கு இறுதி நேரத்தில் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தேர்தல்களுக்கான வேட்பு மனுத தாக்கல் முடிவடைந்த பின்னர் இவர்கள் இரகசியமான முறையில் வாக்கு சேகரிக்க முயல கின்றனர்.

மத ஊர்வலம் எனக் கூறிக் கொண்டு பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 81 ஆம் இலக்கச் சட்டத்தை இது மீறுவதாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம், தர்ம இராஜ்ஜியம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் இவ் ஊர்வலத்தை நடாத்தத் திட்டமிட்டதற்காக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ணவை நீதிமனறில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவ் ஊர்வலத்தை தடைசெய்யும் உத்தரவை என்னால் வழங்க முடியாதிருந்தது. இவை தேர்தல்கள் சட்டத்திற்கு முரணானவை. ஊர்வலங்கள், கூட்டங்களை நடாத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் இத்தகைய தேர்தல் வன்முறைகளைத் தடுக்க சட்டரீதியான நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கே முடியும்.

ஆனால், இவை தேர்தலுடன் தொடர்புபட்டதாக அவர்கள் கூற முடியாது. ஆயினும் பாராளுமன்ற தேர்தல்களை நடாத்தி 89 ஆம் பிரிவின் கீழ் இந்நடவடிக்கைகளை தடுக்கும் அடிப்படையில்லாமல் உத்தரவு பிறப்பிக்க முடியாது என மஜிஸ்திரேட் மேலும் தெரிவித்துள்ளார். (உ-6)

# 'நாடக வழக்கு' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய 'நாடக வழக்கு' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக கிழமை 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வெளியீட்டுரையை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இணுவை துரை எங்கரசுவும், வாழ்த்துரையினை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசாவும், கவிஞர் சோ.பத்மநாதனும் நிகழ்த்தவுள்ளனர். (உ)


## கந்தபுராணம் - யுத்த காண்டம் உரை நூல் வெளியீடு

2004.02.04ல் நடைபெறவிருந்த மேற்படி வெளியீடு 2004.03.06 சனிக் கிழமை பி.ப. 2.00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும். சைவப் பற்றாளர்களின் வருகையைப் பெரிதும் எதிர்பார்க் கின்றோம்.

மேற்படி உரைநூலை நல்லை ஆதீனத்திலும் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்திலும் 2004.03.06 திகதிக்குப் பின்னரும் பிரதி ஒன்று ரூபா 650/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.


சைவத்தமிழ்நூல் வெளியீட்டுக் கழகம்

(C/7374)

# தேர்தல் காற்றில் அடியுண்டு வழி மாறிச் செல்லும் தேரர்கள்

இலங்கையின் 13 வது நாடாளுமன்றத் தேர்தலூடாக பெருமளவு பௌத்த மதகுருமார்கள் அரசியலினுள் நுழைய முறபடுகின்றமை குறித்து தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்பலைகள் தோன்றியுள்ளன.

**அரசியலுக்குப் புறம்பாக நின்று அதனை வழிநடத்தவேண்டிய பொறுப்புள்ள தேரர்கள் அரசியலில் ஈடுபடுவது பௌத்த தர்மத்திற்குப் புறம்பானதும், துறவிகள் என்ற அந்தஸ்துக்கு இழுக்கை ஏற்படுத்தக் கூடியதுமாகும்.**





இலங்கையின் அரச மதமான பௌத்த மதத்திற்கு நாட்டின் இறைமையைக் காக்கும் பாரிய பொறுப்புள்ளது. அரசியல்வாதிகளின் கட்டுக்கடங்காத செயற்பாட்டினால் தற்பொழுது நாட்டின் இறைமை அதளபாதாளம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.இதனைத் தடுத்து நாட்டினைக் காப்பாற்றவும் அரசியலை நல்வழிப்படுத்தவும் தாம் முயல்வதாகக் கூறி 280க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

**வழிநடத்தவேண்டியவர்கள்**

**வழிமாறிப் போயினர்**

நாட்டின் அரசியலைக் கண்காணித்து அதனை அரசியலுக்குப் புறம்பாக நின்று தட்டிக் கேட்டு வழிநடத்தவேண்டிய மிகப் பெரிய பொறுப்பில் உள்ள தேரர்கள் இவ்வாறு அரசியலில் குதிப்பதால் இத் தேரர்களின் அரசியல் தவறுகளைத் தட்டிக் கேட்டு வழிநடத்துவது யார் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஜனாதிபதி-பிரதமர் ஆகியோரிடையே நிலவிவந்த கருத்து முரண்பாட்டினால் தற்போதைய அவசர தேர்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சட்டவாக்க அதிகாரத்தையும், நிறைவேற்று அதிகாரத்தையும் ஒருசேரத்தான் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக இவ் அவசர தேர்தல் ஆணையை ஜனாதிபதி கடந்தமாதம் 7ஆம் திகதி பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தேர்தல் ஆரவாரங்களில் பெரும்பாண்மையாகக் கலந்து கொண்ட தேரர்கள் ஏனைய மதங்களைப் போலவே பௌத்த மதங்களும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

இதனால், பௌத்த சாசனம் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. இவற்றிற்கு ஒரு முடிவுகட்டவே தாம் அரசியலில் ஈடுபடுவதாக மேடைகளில் முழங்கினர். இதில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சி சார்ந்த பிக்குகள் மிகவும் ஆர்வம் காட்டி வந்தனர்.

**பெயருக்கு இழுக்கு**

இவ் ஆரவாரங்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் அதிவணககத்திற்குரிய எல்லாவல மெதானந்த தேரரின் கருத்துக்கள் யாவும் பௌத்தமதவாதிகளின் கவனத்தைக் கவரக்கூடியதாக அமைந்திருக்கிறது.

ஆனால், அரசியலுக்குப் புறம்பாக நின்று அரசியலை வழி நடத்தவேண்டிய பொறுப்புள்ள தேரர்கள், அரசியலில் ஈடுபடுவது பௌத்த தர்மத்திற்குப் புறம்பானதும், துறவிகள் என்ற பெயருக்கு இழுக்கை ஏற்படுத்தக் கூடியதும் என அஸ்கிரிய - மல்வத்த பீடாதிபதிகள் இணைந்து கண்டித்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, பிக்குகள் அரசியலில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என ஜனாதிபதி ஆணைக்குழு விசனம் தெரிவித்துள்ளது.

ஆட்சிக்குவரும் எந்தவொரு கட்சிக்கும் ஆலோசனை வழங்கும் தகுதியுடைய தேரர்கள் அரசியலில் ஈடுபடுவதால், அவர்களின் கருத்தை அரசியல் இலாபம் கொண்டதாகவே கருதி ஆட்சிக்குவரும் கட்சிகள் புறக்கணிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதால் தேரர்கள் அதிகார ஆசையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதே நியாயம் என ஜனாதிபதி ஆணைக்குழு மேலும் விமர்சித்துள்ளது.

**ஜாதிகஹெல உறுமயக் கட்சி சார்பாக 280 தேரர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். இத்தேர்தலூடாக அரசியலுள் நுழைய முற்படுவது பௌத்த கோட்பாடுகளுக்குப் புறம்பானது.**

**அழிவுப்பாதை**

இதேபோல தேரர்கள் அரசியலுக்குள் குதித்துவிட்டதால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கட்டிக்காக்கப்பட்டுவந்த பௌத்த சாசனம் அழிவுப்பாதையை எட்டியுள்ளதாக சர்வோதய இயக்கம் கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பு அரசியலுக்கு உண்டு. இவ் அரசியலைப் பாதுகாக்கவேண்டிய கடமை தேரர்களுக்கு உண்டு. அரசியல் என்பது தற்போதைய நிலையில் அதிகாரப் பசி நிறைந்ததாகக் காணப்படுகின்றது. எனவே, துறவிகளாக இருந்து அரசியலை வழி நடத்தவேண்டிய தேரர்கள் அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு அடாவடித்தனங்களில் ஈடுபடுவது பௌத்த சாசனத்திற்கே மீளமுடியாத பின்னடைவை உருவாக்கிவிடும் என அது மேலும் சுட்டிக்காட்டுகிறது.

அத்துடன், தேரர்கள் பதவி மோகம் கொள்வது சர்வதேச ரீதியிலும் பௌத்த சாசனத்திற்கு பேரிழுக்கை ஏற்படுத்தும் என அமரபுர பீட மஹாநாயக்க தேரர் அதிசங்கைக்குரிய ராஜகீய பண்டித மகாநாயக்க தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**280 தேரர்கள் தேர்தலில் போட்டி**

ஜாதிக ஹெல உறுமயவின் கட்சி சார்பாக 280 தேரர்கள் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். இத்தேர்தல் ஊடாக அரசியலுள் நுழைய முற்படுவது பௌத்த கோட்பாடுகளுக்குப் புறப்பானது. பிக்குகள் தமக்குரிய சமயக்கடன்களுடன் மட்டுமே நின்றுகொண்டு அரசியலை அரசியல்வாதிகளது கையில் கொடுத்துவிடவேண்டும். மதவாதிகள் அரசியல்வாதிகளாக மாறுவது அவர்கள் சார்ந்த மதத்திற்கு அபகீர்த்தியை உருவாக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**தொகுப்பு: க. பவன்**

எனவே, மதத்தின் பெயரால் தேர்தலை எதிர்கொள்ளப் பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டுவரும் தேர்தல்களின் கருத்துகள் பலராலும் புறக்கணிக்கப்பட்டும், ஆட்சேபிக்கப்பட்டும் வருகின்றபோதும் தேரர்கள் தம்நோக்கில் அழுங்குப்பிடியாகவே உள்ளனர்.

முதன் முறையாக தேர்தலில் பெருந்தொகையாகப் போட்டியிடவுள்ள தேரர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்த தினத்தில் இருந்து இன்றுவரை தீவிர தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பௌத்த மதத்தின் தனித்துவத்தையும், தாற்பரியத்தையும் சிதறடிக்கக்கூடிய அபாயத்தை உருவாக்கும் தேர்தல்களத்தில் தேரர்கள் மதத்தைக்காப்பது என்ற பெயரில் குதித்திருப்பது கேலிக்குரிய விடயமாகவே காணப்படுகிறது.

## தேர்தல் ஏற்பாடுகளைக் கண்காணிக்க தேர்தல் ஆணையர் குழு சுற்றுப்பயணம்

(சென்னை)

புதிய மக்கள் அவைக்கும் நான்கு மாநில சட்டப் பேரவைகளுக்கும் நடைபெறவுள்ள தேர்தல் சம்பந்தமான ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகத் தலைமைத் தேர்தல் ஆணையர் ரி.எஸ். கிருஷ்ணமூர்த்தியும் இரண்டு தேர்தல் ஆணையர்களான பி.லி.சாண்டஸ், என்.கோபாலசாமி ஆகியோரும் பல்வேறு மாநிலங்களுக்கும் விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

முதற்கட்டமாக தலைமைத் தேர்தல் ஆணையரும் மற்றும் தேர்தல் ஆணையர்கள் இருவரும் இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பெங்களூர் சென்று தேர்தல் சம்பந்தமான மாநில அரசின் பணிகளை மறு பரிசீலனை செய்யவுள்ளனர்.

மாநில அரசின் தலைமைச் செயலர், மற்றும் மாநில அதிகாரிகள் ஆகியோரை இவர்கள் சந்தித்துப் பேசுவார்கள்.

தேர்தலில் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள அதிகாரிகளுடனும் அவர்கள் பேச்சு நடத்தவுள்ளனர்.

கர்நாடகத்தில் மக்களவைத் தேர்தலுடன் மாநில சட்டப் பேரவைகளும் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

அது போல் துணைத் தேர்தல் ஆணையர் நூர் முகம்மத் இரண்டு நாட்கள் ஜம்மு - காஷ்மீருக்குப் பயணம் செய்து இப் பணியை மேற்கொள்கிறார். (து)

## மத்தியில் உறவு - மாநிலத்தில் நட்பு எனக் கூறிய கருணாநிதியின் பல்டி

### பா.ஜ.க செயலாளர் அறிவிப்பு

(சென்னை)

பாரதிய ஜனதாக் கட்சியுடன் எந்தக் காலத்திலும் உறவு வைத்துக் கொள்ளவில்லை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறுவது ஒரு சாராரைத் திருப்திப்படுத்துவதற்காகவே என்று பா.ஜ.க. பொதுச் செயலாளர் குமாரவேலு கூறியிருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஒரு மாதத்துக்கு முன்பு வரை பா.ஜ.கவுடன் மத்தியில் உறவு என்றும் மாநிலத்தில் நட்பு என்றும் கருணாநிதி கூறியதாகத் தெரிவித்தார்.

இதற்கு மக்கள், தேர்தலில் சரியான பதில் அளிப்பார்கள் என்றும் குமாரவேலு கூறினார்.(கு)

**இந்தியச் செய்திகள்**

## வாக்களிக்க முதியோருக்கு தனிவரிசை

வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பதற்கு முதியோருக்குத் தனி வரிசை தேவை என்று மத்திய தேர்தல் கமிஷனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அரசு சாரா தொண்டு நிறுவனம் ஒன்றின் சார்பில் தேர்தல் கமிஷனிடம் இது சார்பாக ஒரு மனு அளிக்கப்பட்டுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருக்க இயலாது. எனவே, அவர்களுக்குத் தனிவரிசை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அம் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (கு)

## அத்வானியின் தேர்தல் பிரசார புயல் வேகச் சுற்றுப் பயணம்

(புதுடில்லி)

வரும் மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் செயற்பாட்டின் அடிப்படையில் மக்களின் புதிய ஆணை அமையும் என்று துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி கூறியிருக்கிறார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் 1998இல் இருந்ததைவிட பிரதமர் வாஜ்பாய் மேலும் பிரபலமாக விளங்குகிறார் என்று கூறினார். சர்வதேச அளவிலும் வாஜபாய் சிறந்த அரசியல்வாதியாகத் தற்போது அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகவும் அத்வானி கூறினார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் தேர்தல் பிரசாரத்தை தான் வரும் 10 ஆம் திகதி கன்னியாகுமரியில் துவக்கி வைக்க இருப்பதாக அத்வானி தெரிவித்தார்.

முதற்கட்டத்தில் வீதிவழியே அமிர்தகஸ்வனா வரை பயணம் மேற்கொண்டு பிரசாரப் பணியில் ஈடுபடுவார்.

வாஜ்பாய் அரசு கடந்த 5 ஆண்டுகளில் புரிந்துள்ள சாதனைகளின் அடிப்படையில் பிரசாரத்தில் ஈடுபடப்போவதாக அவர் தெரிவித்தார்.

வரும் 26ஆம் திகதி அமிர்தசரஸைச் சென்றடையும் அத்வானி, 30ஆம் திகதி குஜராத் போர்பந்தரில் இருந்து இரண்டாவது கட்டப் பிரசாரத்தை தொடக்கி ஒரிஸா மாநிலம் பூரிவரை செல்லப்போவதாகத் தெரிவித்திருக்கிறார். (து)

## தி.மு.க. கூட்டணிக்கு திராவிடர்கழகம் ஆதரவு

(நெய்வேலி)

வரும் மக்களவைத் தேர்தலில் மதவாதக் கட்சியான பாரதிய ஜனதாக்கட்சியை எதிர்க்கும் தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளிக்கப் போவதாக திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.

நெய்வேலியில் கட்சித் தலைவர் வீரமணி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதன் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## இன்று ஒரு தகவல்

# வாழ்வது சுலபம்

"இந்தப் பிரச்சினையிலிருந்து எப்படித்தான் தப்பிக் கப்போகின்றேனோ தெரியவில்லை" என்று நினைத்துப் பயந்துகொண்டு போகின்றவர்கள் நிறையப் பேர். பல சந்தர்ப்பங்களில் பிரச்சினை சிறிதாக இருக்கும். ஆனால், பயம்தான் அதிகமாக இருக்கும்.

ஒரு பிரச்சினையை எப்படிக் கையாள்வது என்று தெரி வதில்லை. அதனால்தான் பயம் வருகின்றது. நமக்குள் இருக்கின்ற பலத்தை நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.அதுதான் சிக்கல். அவ்வளவு தூரத்துக்கு ஏன்? நம்மை நாமே கையாள்வது எப்படி என்று இன்னும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

நெருக்கடியான சூழ்நிலைகளைக் கூட நிதானமாக அலட்டிக் கொள்ளாமல் சமாளிப்பவர்கள் சிலர் உண்டு. அப்படிப்பட்ட சிலரைச் சந்தித்து "உங்கள் வெற்றியின் ரகசி யம் என்ன? " என்று கேட்டிருக்கின்றனர். அவர்கள் கூறிய எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் ஏழு விடயங்கள் முக்கியமாகத் தெரிகின்றன.

முதல் விடயம் என்னவென்றால் மனதில் இறுக்கம் இருக் கக்கூடாது. இதற்கு வழி நகைச்சுவை உணர்வுதான். கைவசம் சில ஜோக்குகளை வைத்திருக்கவேண்டும். நேரம் பார்த்து அவற்றை எடுத்துவிட வேண்டும். இரண்டாவது விடயம் அவசரம் கூடாது. நெருக்கடியான நேரத்தில் அவசர மாகச் செயற்படத் தோன்றும். கொஞ்சம் தாமதப்படுத்து வதால் மனதுக்கு யோசிக்க அவகாசம் கிடைக்கும். அவச ரத்தில் பிழையான காரியங்களைச் செய்துவிடாமல் இருக்க இது உதவும்.

அடுத்த விடயம் உங்களால் ஒரு வெற்றி கிடைத்து விட்டால் உடனே என்னால் தான் இது நடந்தது என்று டமாரம் அடிக்க ஆரம்பித்துவிடக்கூடாது. உங்களுக் குள்ளே சந்தோசப்பட்டுக்கொள்ளுங்கள் அதுபோதும். ஒரு வேலை நடக்கும்போது தர்மசங்கடமான சூழ்நிலையை யாருக்கும் உருவாக்கிவிடக்கூடாது.

அடுத்த விடயம் நம்மைப் பற்றிய விமர்சனம் அல்லது நமக்குஏற்பட்ட அவமானம் இது நமது மனதை மிகவும் சங்கடப்படுத்தும். ஒரு பெரிய மனோதத்துவ நிபுணர் என்ன சொல்கிறார் தெரியுமா? ஒருவர் நம்மைப் பார்த்து ஏளனமாகப் பேசினால் அவர் அப்படிப் பேசியதற்கு என்ன காரணம் என்று சிறிது நிதானமாக யோசித்துப் பாருங்கள். ஏனென்றால், பல சமயங்களில் அதற்கு நாம் காரணமாக இருக்கமாட்டோம். யார் மீதோ உள்ள கோபத்தை வேறு வழியில்லாமல் நம்மீது காட்டியிருப்பார்கள். அடுத்த விடயம் வெளிப்படையாக இருங்கள். எதையும் மூடி மறைக்க வேண்டாம். நினைப் பதைச் சொல்லுங்கள்.

அடுத்து ஒரு விடயம் சரிவராவிட்டால் அடுத்து என்ன செய்யலாம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்குத் தயாராக இருக்கவேண்டும். 1963 ஆம் ஆண்டு மே மாதம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலத்தில் ஒரு பிரச்சினை. தானாக இறங்கக் கூடிய கருவிகள் திடீரென்று வேலை செய்யவில்லை. உடனே அதிலிருந்த விண்வெளி வீரர் பயந்துவிடவில்லை. கையாலேயே கருவிகளை இயக்கி அதைச் சரிசெய்துவிட்டார். ஏனென்றால் அவர் அதற்குத் தயாராகவே இருந்தார். அதற்கான பயிற்சிகளை முன்கூட்டியே முறையாகச் செய்திருந்தார்.

அடுத்து சில விடயங்களை முன்பே எதிர்நோக்க வேண் டும். அமெரிக்காவில் ஒரு நிறுவனத்தின் தலைவர் கூட்டத் திற்குப் போகு முன்பே அங்கு என்னென்ன பிரச்சினைகள் எல்லாம் வருமென்று எதிர்மறையாகவே எதிர் பார்த்துக் கொண்டு வருவாராம். அதனால் கூட்டம் நடை பெறும்போது அவருக்குக் கோபம் வருவதே இல்லையாம். மிகவும் திறமையான நிர்வாகி என்று அவர் பெயர் வாங்கினாராம். இதுபோன்ற சில நுணுக்கங்களை நாமும் பழக்கப் படுத்திக் கொண்டால் வாழ்வது சுமையாகத் தெரியாது. சுலபமாகத் தெரியும். நமக்கு மட்டுமல்ல நம்மைச் சுற்றியிருப்போருக் கும் வாழ்க்கை சுலபமாகி விடும்.

குடும்பத்தில் கூட நிதானமாக கணவன் என்று சிலர் பெயர் எடுப்பது உண்டு. ஒருவர் திருமணமாகி 5 வருடங்களின் பின் ஒருநாள் பொலிஸ் நிலையத்திற்கு வந்தார். " எங்களுக்குத் திருமணமான நாளிலிருந்து தினமும் என் மனைவி ஏதாவது ஒரு பொருளை என்மீது வீசி எறிந்து கொண்டே இருக்கிறாள் " என்று புகார் செய்தார். " இதற்கு முன்பு இதை ஏன் இங்கே வந்து கூறவில்லை ? " என்று கேட்டார் பொலிஸ். " இன்று தான் அவள் எறிந்த பொருள் என்மீது பட்டது " என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேர்தல் நடத்துவதற்கான ஏதுநிலை வடக்கு-கிழக்கில் தற்போது இல்லை

## ஜே. வி. பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்த முடியாத பகுதிகளில் பொதுத்தேர்தலை நடத்துமாறு விடுதலைப் புலிகளும் ஏனைய சில அமைப்புகளும் விடுத்த அறிக்கை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி சந்தேகம் வெளியிட் டுள்ளது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் பல வருடங் களாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணை யாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, அந்தப் பிரதேசங்களில் தேர்தல் களை நடத்துவதற்கு தேவையான ஜனநாயகமும் சுதந்திரமும் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட் டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொதுத்தேர்தலை நடத் துவதற்கான நிலைமை குறித்து அவசரமான மாற்றம் ஏற்பட்டுள்ளமையை தாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான நிபந்தனைகளையும் வழங்காது ஆயுதம் தாங்கிய குழுவினரின் அதிகாரத்தின் கீழான பகுதிகளில் பொதுத்தேர்தலை நடத்த வேண் டாம் என்று மக்கள் விடுதலை முன்னணி தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளது.(உ-2)

# மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து க.கா. குழுவினர் கலந்தாலோசனை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கடலில் அப்பகுதி மீனவர்கள் தமது தொழிலைச் செய்வதற்கு இராணுவத்தினர் தடை விதித்து வருவது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப் பட்டமை தொடர்பாக இன்று கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நேற்று கண்காணிப் புக்குழுவினருக்கும் தொண்டை மானாறு அக்கரை, காட்டுப்புலம் கடற்தொழிலாளர் சங்க அங்கத் தவர்களுக்குமிடையிலான கலந் துரையாடல் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பிரதேச கடற்புலிகளின் பிரதிநிதிகள் இருவர் கலந்துகொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் கடந்த 22ஆம்திகதி தொடக்கம் தொண்டைமானாறு கடல் நீரேரி யில் தாம் தொழில் செய்வதற்கு பல்வேறு காரணங்களை கூறி இராணுவத்தினர் மறுத்து வருகின்றனர் எனவும் தற்போது அப்பகுதி உயர் பாதுகாப்பு வல யம் என்பதால் அங்கு மீன் பிடிப்பது தொடர்பாக அனுமதிக் கும் முடிவை ஜனாதிபதியே எடுக்கமுடியும் எனவும் கூறிவரு கின்றனர்.

குறிப்பிட்ட பகுதி கடலில் விளக்குடன் ஒரு இடத்தில் நின்று தொழில் செய்யுமாறும் 18வயதுக்குட்பட்டவர்கள் தொழில் செய்ய முடியாது எனவும் முன்பு தடைவிதித்திருந்தனர்.

தற்போது அப் பகுதி உயர் பாதுகாப்பு வலயம் என காரணம் கூறி அப்பகுதியில் தொழில் செய்ய தடைவிதித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியைச் சேர்ந்த 150 குடும்பங்கள் வரை தொழில் செய்ய முடியாத நிலையை அடைந்துள்ளனர். குறிப்பிட்ட கடல் பகுதி ஆழம் குறைந்த பகுதியென சுட்டிக்காட் டப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட கண்காணிப்புக்குழுவின் பிரதி நிதி தாம் இராணுவத்தினருடன் கதைத்து சாதகமான முடிவை பெற்றுத்தருவதாகக் கூறினார்.

தமது முயற்சி பயனளிக்காவிட்டால் தமது தலைவரிடம் கூறி உயர் மட்டத்துடன் கதைத்து பிரச்சினைக்கான தீர்வைப் பெற் றுத்தர முடியுமெனவும் இராணு வத்தினரின் மேற்படி நிலமை யுத்த நிறுத்த மீறலா என்பது யோசிக்கவேண்டிய விடயம் எனவும்,அவ்வாறா யின் அது தொடர்பாக தமது கருத்துக்கு இராணு வத்தினர் ஒத்துழைப்புத் தர வேண்டும் என கூறினார்.

(உ-3)

## இராசி பலன்

04. 03. 2004

(மாசி 21, வியாழக்கிழமை)

| | | |
|---|---|---|
| திரயோதசி | பின்னிரவு 6 .04 | வரை |
| பூசம் | முற்பகல் 10.41 மணி | வரை |
| இராகுகாலம் | 1.56- 3.26மணிவரை | |
| சுபநேரம் | 7.56-9.26 மணிவரை | |

### பிரதோச விரதம்

**மேடம்**
கல்வியில் ஆர்வம், ரோகநிலை, காரிய தாமதம், புதிய செய்தி.

**இடபம்**
அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், போசன சுகம்.

**மிதுனம்**
வீண் வாதம், எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், பிரயாணம்.

**கடகம்**
புதிய முயற்சி, வாக்கு மேன்மை, நல்ல சிந்தை, நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம்**
காரிய அலைச்சல், அமைதிக்குறைவு, எதிர் பாராத செலவு, உறவினர் சந்திப்பு.

**கன்னி**
உறவினர் வருகை, கீர்த்தி, முயற்சி கைகூடும், பிரயாணம்.

**துலாம்**
பிறர் உதவி, கடின முயற்சி, போசன சுகம், மேன்மை.

**விருச்சிகம்**
புதிய திட்டமிடல்,இடமாற்றம், கடின உழைப்பு, முயற்சி தாமதம்.

**தனுசு**
திருடர்பயம், காரியத்தடங்கல், தொழில் கஷ்டம், பிரயாணம்.

**மகரம்**
எடுத்தகருமங்கள் கைகூடும், பெருமை யான சம்பவம், நல்லவருமானம், தெய்வ சிந்தை.

**கும்பம்**
அதிகாரம், நல்லவரவேற்பு, தொழில் முன் னேற்றம், காரிய சிந்தை.

**மீனம்**
உடல் நலக்குறைவு,எடுத்த கருமங்கள் தாமத மாகும், பணத்தட்டுப்பாடு, சிந்தனைமிகுதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## அமெரிக்காவின் முகவர் நிறுவனப் பணிப்பாளர் விரைவில் இலங்கை வருகிறார்

(பதுளை)

அமெரிக்க முகவர் நிறுவனத்தின் பணிப்பாளர் டேவிற் ரெயிளர் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது அரசியல் தலைவர் கள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து இவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இதன்போது அரசு-புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் தற்போது நிலவும் அமைதிச் சூழ்நிலையை சமாதானம் நோக்கி நகர்த்துவது குறித்து பிரஸ்தாபிக்கப்பட உள்ளது.

அத்துடன், சர்வதேச உதவும் அமைப்புக்களால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதுடன், எதிர் கால அபிவிருத்தித் திட்டமிடல்களையும் மேற் கொள்ளவுள்ளார். (உ-61,4)

## வெளிநாட்டுத்தூதுவர்கள் யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் முறையே இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஸ்ரிவன் இவான் ஆகியோர் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ். வரும் இவர்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். பத்மநாதன், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்புக்களின் போது, போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் இன்றுள்ள நிலைமை, குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ் வுக்குத் தடையாகவுள்ள காரணிகள் மற்றும் தேர்தல் நிலைவரம் ஆகியன குறித்து கலந்து ரையாடவுள்ளனர். (உ-16)

# யாழ்.வலயப் பாடசாலைகளின் கரபந்து, வலைப்பந்துப் போட்டி

யாழ்ப்பாணம் வலயப் பாடசாலைகளுக்கான கரபந்து மற்றும வலைப்பந்துச் சுற்றுப்போட்டிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கான கரபந்துச் சுற்றுப்போட்டிகள் நேற்று ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயததில் ஆரம்பமாகின. அதேவேளை யாழ்.வலயப்பாடசாலைகளுக்கான வலைப்பந்துச் சுற்றுப்போட்டிகள் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை பி.ப.2.30 மணிக்கு ஆரம்பமாகி நாளை மறுதினம் காலை 9.00மணி தொடக்கம் வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

விளையாட்டு அணிகள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டுப் பூரணப்படுத்தப்பட்ட இரு விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் பிறந்த திகதி, அடையாளம் என்பவற்றை உறுதிப்படுத்தும் முகமாக உண்மைப்பிறப்புக்கான சான்றிதழ, தபால தேசிய அடையாளஅட்டை சமர்ப்பித்தல் கட்டாயமானது என்றும் ஒவ்வொரு அணியினரும் விளையாடக்கூடிய ஒரு பந்து கொண்டு வரவேண்டும் என்று உடற்கல்விக்கான உதவீக்கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா அழைப்பு விடுத்துள்ளார். (யே)

## சிம்பாப்வே கிரிக்கெற் விஜயத்தில் ஆஸி.-இங்கிலாந்து அணிகள் தயக்கம்

எதிர்வரும் மே மாதம் சிம்பாப்வேக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேறகொள்வதறகு முன் அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை நேரில் கண்டறியும் பொருட்டு அவுஸ்திரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையினர் 3பேர் கொண்ட குழு ஒன்றை சிம்பாப்வேக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

தற்போது இலங்கைக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணியினர் அதனைத தொடர்ந்து சிம்பாப்வேக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர். சிம்பாபவே ஜனாதிபதி றெபேட் முகாபே அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியினருக்கான முழு அளவிலான பாதுகாப்புக்களையும் தம்மால் வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ளதாக சிம்பாப்வே கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

எனினும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சிம்பாபவே நாட்டுக்குக் கிரிக்கெற் விஜயத்தினை மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் சுற்றுப்பயணம் தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை தற்போது அச்சம் வெளியிட்டுள்ளது. -இது தொடர்பாக இம்மாத இறுதியில் சர்வதேச கிரிக்கெற் பேரவையுடன் பேசசுவார்த்தை நடாத்தவுள்ளதாக, வும் இங்கிலாநது கிரிக்கெற் சபை தெரிவித்துள்ளது. இந்நிலையில் சிம்பாப்வேக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணத்தை இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் ரத்துச் செய்யுமானால் சிம்பாப்வே கிரிக்கெற் கட்டப்பாட்டுச்சபைக்கு பாரிய நஷ்டம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (யே-68)






தற்பொழுது நடைபெற்றுவரும் யூபாக் கிண்ணப்போட்டிகளில் "ஓநீல்ஸ்" கழகத்தின் சார்பாக அதிக எண்ணிக்கையான கோல்களைப் போட்டுள்ள நட்சத்திர ஆட்டக்காரர் லார்சன்.

# அவுஸ்திரேலியாவுக்கு முரளிதரன் சவாலாக விளங்குவார் -லீமன்

இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் எதிர்வரும் டெஸ்ட் தொடரில் தமது அணிக்கு பெரும் சவாலாகத் திகழ்வார் என அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் துடுப்பாட்ட வீரர் டரல் லீமன் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இப் போட்டித்தொடர் இரு அணிகளுக்கும் நினைப்பது போன்று இலகுவானதாக அமையப்போவதில்லை. நாம் இந்த நிலையை நன்கு விளங்கியுள்ளோம். துடுப்பெடுத்தாடுவது மட்டுமன்றி பந்து வீச்சையும சிறப்பாக மேற்கொள்ள வேணடும். காலி மைதானம் பெரும்பாலும் சுழலபந்து வீச்சாளர்களுக்குச் சாதகமானது. அதன் காரணமாகப் போட்டியின் தீவிரம் வலுவடையக் கூடும் நான் அஸ்கிரிய மைதானத்தில் விளையாடாதபடியால் இம மைதானம்பற்றி எனக்குத் தெரியாது. எது எவ்வாறாகயிருப்பினும் இலங்கையின் ஆடுகளங்கள் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு உசிதமாக அமையப் போவதில்லை என்பதே எனது கருத்து. முரளிதரன் ஒரு நாள் போட்டிகளில் தனது ஆற்றலின் உச்சத்தில் பிரகாசிக்கத் தவறினாலும் டெஸ்ட் போட்டிகளில் இந்த நிலைமை பெரிதும் வித்தியாசமானது என லீமன் தெரிவித்தார்.

34வயதுடைய லீமன் 1998ம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமானார். மார்க் லோவிற்கு பதிலாக அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் இடம்பிடித்த லீமன் 15 போட்டிகளில் விளையாடி 3சதங்கள் உட்பட 995ஓட்டங்களைக் குவித்துள்ளார். (யே-121)



தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பாவித்த குற்றச்சாட்டின் பெயரில் இரண்டு வருடங்களுக்கு மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றத் தடைவிதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய சம்பியன் டோசன் சேம்பர்ஸ் படத்தில் காணப்படுகிறார்.

## மெய்வன்மை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப.1.30மணிக்கு கல்லூரி அதிபர் திரு நா.வன்னியசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சியில் யாழ்.கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கலவிப்பணிப்பாளர் யோகர் சுவாமி ரவீந்திரன் முதன்மை விருநதினராகவும் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் நா.சிவராஜா அவர்கள முதன்மை விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பர். திருமதி ஜெயராணி ரவீந்திரன் அவர்கள் பரிசில்களை வழங்குவார். (யே)

* * *

(கோப்பாய்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெயவல்லுநர் போட்டி வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணியளவில் நடைபெறவுள ளது. வித்தியாலய அதிபர் சு.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி முதன்மை விருந்தினராகவும் சர்வதேச மாணவர் பேரவை முன்னாள் தலைவர் செல்வராஜா கஜேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (யே-79)

* * *

(கோப்பாய்)

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கல வன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு அதிபர் இ.தேவராஜா த்லைமையில் நடைபெறவுளளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எம். எஸ். ஸ்ரீ தயாளனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல் விப்பணிப்பாளர் இ. சிவஞான சுந் தரமும் கலந்து கொள்ள வுள்ளனர். (யே-79)

# விளையாட்டு

## இலங்கைக் கிரிக்கெற் 'ஏ' அணி நியூசிலாந்து சுற்றுப் பயணம்

இலங்கை கிரிக்கெற் 'ஏ' அணியினர் கிரிக்கெற் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று நியூசிலாந்து பயணமாகின்றனர். இப் போட்டித் தொடரில் 3டெஸ்ட் போடடிகள், 3ஒருநாள் போட்டிகள், ஒரு இறுதிநாள் ஆட்டம் என்பவற்றில் இலங்கை 'ஏ' அணி பங்குபற்ற உள்ளது. இத்தொடரில் இலஙகை அணிக்கு நவீட் நவாஸ் தலைவராகவும், திலின இந்தம்பி உப தலைவராகவும் செயற்படுவர் என அறிவிக்கபபட்டுள்ளது.

நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இணைந்து கொள்ளவுள்ள ஏனைய வீரர்களாக,

இயன டானியல், பிரதீப ஹேவகே, ஜகான் முபாரக், பார்திய பெரேரா, கஸந்த பெர்னாண்டோ, பிரசன்ன ஜெயவர்த்தன (விக்கெற் காப்பாளர்), டினுக்க கெட்டியாராய்ச்சி மாணிக்க, மரியோ வில்லவராயன், தரங்க லக்ஷித, சத்திக புத்திக, சாமர சில்வா, டினூஸ பெர்னாண்டோ, சாந்த கலுலிட்டிக்கொட ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அத்துடன் இவர்கள் பங்குபற்றும் முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 7ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. இதேவேளை, உத்தியோகபூர்வமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதியும், 2வது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி 19ஆம் திகதியும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி 27ஆம் திகதியும் ஆரம்பமாக இருக்கின்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்டி ஏப்ரல் மாதம், 3ம்,5ம்,7ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது. (யே-121,68)

## மெய்வல்லுநர்ப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை மாலை 2.00மணிக்கு மத்தியூஸ் வீதியிலுள்ள பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்ச்சிக்கு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் புனித மரியாள் பேராலய பங்குத் தந்தை அருள்பிதா சவுந்தரநாயகம் விசேட விருந்தினராகவும் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் டி.ஆர்.அருமைநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (யே)



இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் புதிய பாணியிலான பந்துவீச்சு ஒன்றை அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித்துள்ள அவுஸ்திரேலியாவின் சுழல்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன்.



புதுப் பெயருடனும் புதுப் பொலிவுடனும் மெருகூட்டப்பட்டுள்ள சிறுவர்களுக்கான மில்லேனியம் பூங்கா மருதானை ரீ.பி.ஜெயமாவத்தையில் மகாவலி கேந்திர மையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

# ஆறு நாடுகள் பங்கு பற்றிய பெய்ஜிங் பேச்சுவார்த்தை

## முடிவெதுவுமின்றி ஒத்திவைக்கப்பட்டது

(நியூயோர்க்)

வடகொரிய அணுவாயுத விவகாரத்திற்கு தீர்வுகாணும் வகையில் நடைபெற்ற 6 நாடுகள் பங்கு பற்றிய பெய்ஜிங் பேச்சுவார்த்தைகளில் எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படாவிட்டாலும் இத்தகைய கலநதுரையாடல்கள் தொடர்ந்து இடம்பெறுவதை வரவேற்பதாக ஐககிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், கொரிய தீபகற்பத்தை அணுவாயுத சூனியப் பிரதேசமாக்குவதில் பெய்ஜிங் பேசசுவார்த்தைகள் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளன என்று தெரிவித்தாா.

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான பெய்ஜிங் பேச்சு வார்த்தைகளை வரவேற்றுக் கருத்து வெளியிடுகையில், வடகொரிய அணுவாயுதப் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளும் உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை அனுசரணை வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

நான்கு நாட்கள் நீடித்த பேச்சுவாத்தைகளின் முடிவில் சன வெளிவிவகார அமைச்சர் உரை நிகழ்த்துகையில், யூன் மாதத்தின் முன்னா் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செயவதற்கு விசேட குழு ஒன்று நியமிககப்பட்டுள்ளது எனறு தெரிவித்தாா்.

பெய்ஜிங பேச்சுவார்த்தை எந்த விதத்தீர்மானமும் மேற்கொள்ளப்படாமல், அதேசமயத்தில மீண்டும் கூடுவதென அறிவித்து முடிவடைந்தது.

வடகொரியா, சீனா, ஜப்பான், ரஷ்யா, தென்கொரியா, அமெரிக்கா ஆகிய ஆறு நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கு பற்றியிருந்தனர். (து-9)



ஈராக்கின் புனித நகரான கர்பலாவில் அஷராவை முன்னிட்டு ஷியா முஸ்லிம்களால் அனுட்டிக்கப்படுகின்ற மத நிகழ்வொன்றின் போது மில்லியன் கணக்கான மக்கள் கூடியிருந்த கர்பலாவில் ஐந்து தொடர் குண்டுகள் வெடித்தன. காயம் அடைத்தவர்கள் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

# பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த மலேசியப் பிரதமர் முடிவு

(கோலாலம்பூர்)

மலேசியப் பாராளுமன்றம் இன்று கலைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் அப்துல்லா அஹமத் பதாபியின் அரசாங்கம் இன்றைய தினம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்படலாம் என்று கோலாலம்பூர் செய்திகள் தெரிவிக்கின்றது.

எந்தவித முன்னறிவிப்புக்களும் இன்றி இன்றையதினம் பாரா்ளுமன்றம் கலைக்கப்படுவதாகவும் அடுத்துவரும் தேர்தலுககு தமது கட்சியினரை தயாராகுமாறும் பிரதமா் தெரிவித்ததாக அந்தச் செய்தி ஊர்ஜிதம் செய்கின்றது.

கடநத ஒக்டோபர் மாதம், 22 வருட கால பிரதமராக இருந்த அனுபவம் வாயந்த மஹதியர் முகமதுவினால் இவா பிரதமராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து-9)

# வெளிநாட்டு விமான நிலையங்களில் சொந்தக் கண்காணிப்பாளர்கள்

## நிறுத்த அமெரிக்கா தீர்மானம்

(வாஷிங்டன்)

அமெரிக்கா தனது சொந்தக் கண்காணிப்பாளர்களை வெளிநாட்டு விமான நிலையங்களில் நிறுத்தத் தீர்மானித்துள்ளது.

தொடர்ந்து வரும் தீவிரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக தமது நாட்டு விமானங்களுக்கும் பயணிகளுக்கும் ஏற்படக்கூடிய பாதுகாப்பு நெருககடிகளை போக்கும் வகையிலேயே இவா்கள் நிறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்காணிப்பாளாகள் பயணிகளின கடவுச் சீட்டுக்கள் மற்றும் உடலியல் சோதனைகள் ஆகியவற்றை மேற்கொள்வாாகள


விசேடமாக அமெரிக்க விமானங்களில் பயணம் செயபவா்களை நோக்கியே இநதச் சோதனைகள் நடைபெறவுளளதாக அமெரிக்க இராஜாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (து-9)

# ஈராக்கில் 200 ஷியா முஸ்லிம்கள் கொலை

(பக்தாத்)

ஈராககில் ஷியா முஸ்லிம் அமைப்பினா் மத வைபவங்களில் ஈடுபட்டிருந்தபோது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 200க்கும் மேற்பட்டோா் உயிரிழநததன் காரணமாக, ஈராக்கின் நிர்வாகத்தை மீண்டும் அந் நாட்டவா்களிடம் ஒப்படைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுத்தாக்குதலகளில் உயிரிழந்தவர்கள் பற்றி அனுதாபம் தெரிவிக்கையிலேயே அவர் இவ்



வாறு கூறியுள்ளார்.

ஈராக்கில ஷியா முஸ்லிம்களுக்கும் அவர்களுக்கு எதிரான மற்றைய முஸ்லிம அமைப்பிற்கும் இடையே நீண்ட காலமாக நிலவிவரும் முறுகல நிலையின் காரணமாகவே இத தாக்குதல்நடத்தப்பட்டுளளதாக அமெரிக்க இராணுவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டதன் பின்னரே அவர்களது தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அமெரிக்க இராணுவப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (து-9)

## ஈராக்கின் எண்ணெய் வர்த்தகம் யுத்தத்தின் பின் பாரிய வீழ்ச்சி

(பக்தாத்)

ஈராக்கில் சதாம் ஹுசைனின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதையடுத்து, அந் நாட்டின் எண்ணெய் ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஈராக்கில் கடந்த ஆண்டு 6மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மாத்திரமே மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக அந் நாட்டின் வா்த்தக அமைப்பினா் தெரிவித்துள்ளனர்.

முன்னா் 357 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எண்ணெய் வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் எனினும் இது மொத்த எண்ணெய் வர்த்தகத்தின் மூன்றில் ஒரு பகுதியே எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேரடி வர்த்தகத்தின் மூலமான ஏற்றுமதி வழமைக்குத் திரும்பவில்லை என்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கின் மக்களுக்கு பிரதான வருமான வழியாக எண்ணெய் உற்பத்தி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எண்ணெய் ஏற்றுமதித் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி அந்நாட்டின பொருளாதாரத்தில் எதிர்வரும் சில ஆண்டுகளுக்குள் பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகிறது. (து-9)




## ஹெயிட்டியின் சர்வதேச படையணியில் சிலியும் இணைந்தது

(சான்டியாகோ)

ஹெயிட்டியின் சர்வதேச படையணியில் தமது பங்களிப்பைச் செலுத்த சிலி நேற்று முன்தினம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

ஹெயிட்டிக்கான சர்வதேச படைப் பிரிவில் அமெரிக்காவோடு பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளின் இராணுவ வீரர்கள் இணைந்திருக்கிறார்கள்.

ஹெயிடடி ஜனாதிபதியாக இருந்த யூன் போர்ட்டின் அரிஸ்ரைட் தனது பதவியை கடந்த ஞாயிற்றுக்கிழமை இராஜினாமாச் செய்தார்.

தீவிரவாதிகளின் தாக்குதல்களும், ஐக்கிய அமெரிக்காவின் அழுத்தமும் அவரது இராஜினாமாவிற்கு காரணமாக அமைந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. (து-9)

## பி.பி.ஸி.இன் மூத்த பத்திரிகையாளர் ஓய்வு பெறப் போவதாக அறிவிப்பு

(நியூயோர்க்)

பி.பி.ஸி.யின் நீண்டகாலப் பத்திரிகையாளரான அலிஸ்ரர் ஹுக் தான் எழுதிவரும் "அமெரிக்காவில் இருந்து கடிதம்" என்னும் வாரந்திர மடலை வழங்கும் பணியில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.

95 வயதான அலிஸ்ரர் ஹுக் இனி நிழச்சிகளை வழங்கப் போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

ஆனால அவர் முன்னா் வழங்கிய மடல்களில பலவற்றை பி.பி.ஸி அடுத்த சில வாரங்களுக்குள் ஒலிபரப இருக்கிறது.

மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் அவா் ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

1934 ஆம் ஆண்டு அலிஸ்ரர் ஹுக் பி.பி.ஸி யில் சேர்ந்தார்.

2 ஆம் உலகமகா யுத்தம் முடிந்து சிலகாலம் கழித்து "அமெரிக்காவில் இருந்து கடிதம்," நிகழ்ச்சியை வழங்கத் தொடங்கினார்.

நியூயோர்க் மத்திய பூங்காவைப் பார்த்தவாறு அமைந்துள்ள தனது வீட்டில் இருந்து தனது தட்டச்சு இயநதிரத்தைக் கொண்டு ஒவ்வொரு வியாழககிழமையும் அவர் இந்த மடலைத தயாரித்து வந்தார். (து-9)

## நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் தீவிரவாதிகளின் தாக்குதலில் 21 பேர்பலி

(காத்மண்டு)

நேபாளத்தின் கிழக்குப் பகுதி நகரொன்றில் தீவிரவாதிகளின தாக்குதலில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் அந்த நாடடில் சமாதானப் பேச்சுவார்ததைகள் முறிவடைந்ததைத் தொடாந்து மேற்கொள்ளபபட்ட தாக்குதல்களில் இதுவே மிகப்பெரிய தாக்குதல் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகா் காத்மண்டுவில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள போச்பூர் மாவட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக காத்மண்டுப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டில் இடம்பெற்றுவரும் தீவிரவாதத் தாக்குதல்கள் காரணமாக இதுவரை 8 ஆயிரத்து 900 துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

# ஹெயிட்டி கிளர்ச்சியாளர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும்

## அமெரிக்கா கோரிக்கை

(கராரே)

ஹெயிட்டி கிளர்ச்சிவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக் குத் திரும்ப வேண்டும் என அமெரிக்கா கோரியுள்ளது.

கிளர்ச்சியாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி ஜோன் பேட்ரண்ட் அரிஸ்ரைட் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதால் கிளர்ச்சியாளர்கள் நிச்சயமாக தமது ஆயுதங்களைக் களைய வேண்டும் என அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் தொிவித்துள்ளனா்.

கிளா்ச்சி வாதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக நூற்றுக்கணக்கான சர்வதேசப் படையினா் ஹெயிட்டியில் இறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்நாட்டில் கிளர்ச்சி வாதிகளைக் கட்டுப்படுத்தி ஜனநாயக ஆட்சியொன்றை மீளமைக்கும் வரை சர்வதேசப படைகள் அங்கு நிலை கொண்டிருக்குமென அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே தான் நாட்டை விட்டு வெளியேறியதாக ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைட் தெரிவித்துள்ளமை தெரிந்ததே. (து-9)

## பாகிஸ்தானில் 'ஷியா' முஸ்லிம்கள் மீது தாக்குதல் 37 பேர் கொலை; 100க்கு அதிகமானோர் காயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் அஷ்ரா புனித தினத்தின போது நடந்த ஒரு தாக்குதலில் 37 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டும், நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துமுள்ளனர்.

தென்மேற்கு நகரில் ஷியா மக்களின் பண்டிகை ஊர்வலத்தை இலக்கு வைத்து வெடிகுண்டுத் தாக்குதலும துப்பாக்கித் தாக்குதலும் நடத்தப்பட்டதில் இந்த உயிர்ச சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஊரில் ஊடரங்கு உத் தரவு பிறப்பிககப்பட்டுள்ளதோடு, பாகிஸ்தானிய நகரஙகள பலவற்றிலும் பாதுகாப்புத் தவிரப் படுத்தப்பட்டுள்ளது. (து9)

அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். -குறள்

வலம்புரி

## மாநகரசபையின் அறிவுறுத்தலை வர்த்தகர்கள் கடைப்பிடிப்பார்களா?

யாழ்.மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருட்கள் மற்றும் உற்பத்தி முடிவுத் திகதிகள் குறிப்பிடப்படாத உணவுப் பொதிகள் என்பன விற்பனைக்கு வைத்திருப்பது குறித்து யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி, வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அண்மைக்காலங்களில் யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழு மேற்கொண்ட திடீர் பரிசோதனைகளின்போது வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பண்டங்கள், மனித பாவனைக்கு உதவாத தின்பண்டங்கள் மற்றும் உற்பத்தித் திகதிகள், முடிவுத் திகதிகள் குறிப்பிடப்படாத உணவுப் பொதிகள் ஆகியன விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்பது தமிழர்தம் முதுமொழி. உணவு கொடுப்பது என்பது பணம் பெறாமல் தானமாகக் கொடுப்பதை மட்டும் குறிக்கவில்லை. மாறாக உணவுச் சாலைகள் அமைத்து உணவுப் பண்டங்களை விற்பனை செய்வது கூட உயிர் கொடுக்கும் பணியே.

தமது நாளாந்த உணவுத் தேவைக்கு உணவுச் சாலைகளை நம்பி வாழுகின்றவர்கள் ஏராளம். அவ்வகையில் பசியாற்றும் பெரும் பணியை உணவுச் சாலைகளின் உரிமையாளர்களும், அங்கு பணியாற்றுகின்றவர்களும் செய்து வருகின்றனர் இது பாராட்டுக்குரியது.

ஆனால் "உயிர் கொடுத்தோர்" என்ற பதம் இங்கு அனைவராலும் உற்று நோக்குதற்குரியது. உணவு இன்றேல் மனிதன் உயிர்வாழ முடியாது. அவ்வகையில் உணவு கொடுத்தவர்கள் உயிர் கொடுத்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள் என்ற அர்த்தமே வெளிப்படையாகப் பலராலும் நோக்கப்படுகின்றது.

ஆனால் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற சொற்பதத்திற்குள் இருக்கக் கூடிய இன்னோர் கருத்தும் அவதானித்தற்குரியது.

அதாவது உணவுகள் மாசடைவதால் ஏற்படக்கூடிய தொற்றுநோய்கள் ஏராளம். குறிப்பாக உணவுப் பண்டங்களைத் திறந்து வைத்து விற்பனை செய்கின்ற போது நோய்க் காவிகளான இலையான் போன்றவற்றால் அந்த உணவு மாசடைகின்றது.

அதேபோல் உணவைத் தயாரிப்பவர்கள் மற்றும் உணவைப் பரிமாறுவோர் தனி நபர் சுத்தம் பேணாத நிலையில் அவர்களிடையே இருக்கக் கூடிய குடல் சார்ந்த தொற்றுநோய்க் கிருமிகள் உணவில் சேரக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

இவை தவிர காலாவதியான உணவுப் பண்டங்களில் பங்கசு போன்ற கிருமித் தொற்று ஏற்பட்டு அதன் மூலமாக குடல் சார் தொற்றுநோய்களும், இரப்பை போன்ற உறுப்புகளில் புற்றுநோய் போன்ற தொற்றாநோய்களும் ஏற்படுவதற்கு வாய்ப்பாகிவிடுகின்றது.

இவ்வாறாக மாசடைந்த உணவுகள் நோயைத் தந்து உயிர்களைக் காவுகொண்டுவிடும் என்பதால் சுத்தமான உணவைக் கொடுப்பது உயிரைக் கொடுப்பதாக இருக்கும்.

எனவே இங்கு பழுதடைந்த - பாவனைக்குதவாத - திறந்து வைக்கப்பட்ட உணவுகளை விற்பனை செய்வது உயிர்கொடுப்பதற்குப் பதிலாக உயிரை எடுப்பதாகவே இருக்கும்.

எனவே உயிர்கொடுக்கும் பணியைச் செய்கின்ற உணவுச்சாலை உரிமையாளர்கள் தெரிந்தோ, தெரியாமலோ தமது உணவு விநியோகத்தின் ஊடாக நோய்களைப் பரப்பி விடுகின்றனர். இதன் விளைவாக பலர் தமது இன்னுயிரை இழக்க வேண்டி ஏற்படுகின்றது.

உணவுச்சாலை உரிமையாளர்கள், உணவு தயாரிப்போர். அற்பலாபத்திற்காகவோ, அன்றி அறியாமலோ பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனை செய்வதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தூய்மையான உணவை விற்பனை செய்து மனித உயிர்களை பாதுகாக்கும் பெரும் பணியை ஆற்ற வேண்டும். இதற்காக சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களை பொறுப்பின்றி - தம்மீது சுமத்தப்படும் பளுவாக எண்ணாமல், மனித உயிர்களைப் பாதுகாக்கும் வழியாகக் கருதி தம்மை வழிப்படுத்திக் கொள்வது உயிர் கொடுக்கும் மிகப் பெரும் புண்ணிய கருமமாகும்.

# மாணவரின் கல்வி பாதிப்படைய ஜனாதிபதியே காலாயுள்ளார்

## கண்டிக்கிறார் கல்வி அமைச்சர்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை நடாத்துவதற்காக உயர்தரப் பரீட்சை திகதியை ஒத்திவைத்துள்ள ஜனாதிபதியின் செயற்பாட்டால் பல மாணவர்கள் பாதிக்கப்படிருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கல்வி அமைச்சருமான கருணாசேன கொடித்துவக்கு குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி நினைத்திருந்தால் மாச் மாதத்திலோ அல்லது ஜுன் மாதத்திலோ இத் தேர்தலை நடத்தியிருக்க முடியும். இந்தியாவில் பாடசாலைப் பருவகாலம் முடிவடைந்த பின்னர் தேர்தல் நடத்தப்படுவதை ஜனாதிபதி அறியவில்லைப் போலும்.

ஜனாதிபதியின் இந்த முடிவு சர்வதேச பாடசாலைகளிற்கு தமது பிள்ளைகளை அனுப்பும் அரசியல் தலைவர்களையோ, அவர்களின் பிள்ளைகளையோ பாதிக்காத போதும், சாதாரண பொதுமக்களையும் அவர்களது பிள்ளைகளையும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கும் ஒன்றாக வேயுள்ளது என்று தெரிவித்துள்ளா். (உ)

## கடமை தவறும் பொலிஸ் அதிகாரிகளுக்கு தற்காலிக இடமாற்றம்

(கொழும்பு)

தேர்தல் கடமைகளின் போது பக்கச்சார்பாகச் செயற்படும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தேர்தல் முடிவடையும் வரை தற்காலிகமாக இடம் மாற்றப்படுவார்கள் என்று வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்தகமகே தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் அனுராதபுர மாவட்ட வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் கலந்துரையாடல் அம்மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றபோது பிரதி பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார்.இந்தக் கலந்துரையாடல் அனுராதபுர மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஏ.டி.யாப்பா தலைமையில் நடைபெற்றது.

எந்தவொரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியேனும் அரசியலில் பக்கச் சார்பாகவும் அல்லது சுயாதீனக் கட்சி சார்பாகவும் செயற்படுவது நிரூபணமானால் அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (உ-2)

## ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம், நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாட சாலையின் ஆதரவுடன் நல்லை நாவலர் மணி மண்டபத்தில பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தும் ஆன்மீக நிகழ்சசித் தொடரில் இம்முறை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் கூட்டுப் பிரார்த்தனை என்பனவும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி ஆசிரியர் ச.லலீசன நன்றியுரையும் இடம்பெறவுள்ளது. (உ-2)

## விழிப்புக்கு குழு அமைப்பு

(இருபாலை)

கோப்பாய் தெற்கு மற்றும் இருபாலைப் பகுதிகளில தினமும் இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களையும் வழிபறிக் கொள்ளைகளையும் ஒழிக்கும் நோக்கில் விழிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த இளைஞர்கள், சிறுவர்கள், வயது வந்தவர்கள் உள்ளிட்ட சுமார் 30 உறுப்பினர்கள் இவ்விழிப்புக்குழுவில் அங்கம் பெறுகின்றனர்.

இவ்விழிப்புக் குழுவின் அவசியத்தை ஏற்கனவே வேண்டியிருந்த அப்பகுதி மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (தி-84)

## சாயி அருளமுதம்

யாவற்றிலும் உறைந்திருக்கும் தெய்வத்துக்குக் காணிக்கையாக அர்ப்பணிக்கப்படும் கருமம், அதியுயர்ந்த சேவையைப் போலப் பரிசுத்தமடைகிறது. இக்காரணத்தினாலேயே அவதாரங்கள் நிகழ்கின்றன. ஆகவே மனித வர்க்கத்துக்கு நீங்கள் சேவையாற்றும் போது அவதாரம் மகிழ்ச்சியடைதல் இயல்பே. அத்துடன் தெய்வீக அருளையும் நீங்கள் வென்றெடுப்பீர்கள். நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## நாட்டைக் காக்கும் பொறுப்பு பிக்குமார் கைகளில் உண்டு

### எல்லாவல மெத்தானந்த தேரர்

(கொழும்பு)

இலங்கையின் சிங்கள பௌத்த கலாசார பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் பிக்குமாரிடம் சுமத்தப்பட்டுள்ளது.

இத்தகைய ஓர் கட்டாயத்தின் அடிப்படையிலேயே பிக்குமார் அரசியலில் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.தொடர்ந்தும் தேசத்தில் சிங்கள பௌத்த கலாசாரம் சிரழிக்கப்படுவதை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்று தேசிய ஹெல உறுமயவின் பிக்குமன்றத் தலைவர் சங்கைக்குரிய எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாடு பல்வேறு முரண்பாடுகளைச் சகித்த வேளைகளில் பிக்குமாரே முகங்கொடுத்தார்கள். தற்போதைய ஆட்சியாளர்கள் இலங்கையில் கலாசாரத்தை காக்கும் செயற்பாடுகளில் இருந்து தவறிவருகின்றார்கள்.

மதுபானம்,போதைப் பொருட்கள், சூதாட்டம்ஆகியனவற்றின் பாவனை நாட்டில் அதிகரித்துவருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இவற்றைக் கட்டுப்படுத்தும் நிலையில் ஆட்சியாளர் செயற்படவில்லை என்று தேரர் குற்றம் சாட்டியுள்ளார். (உ-2)

## பொலிஸாரும் தேர்தல் வன்முறைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் தோ்தல் வன்முறைச சம்பவங்களுக்குப் பொலிஸாரும் விடுதலைப் புலிகளுமே பொறுப்பேறகவேண்டும் என தேர்தல் வன்முறைக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினா் ஒருவரும் இம்மாவடடத்தில் இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் இங்கு வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்களாகியோரிடையே பெரும் பீதி நிலவுகிறது.

இந்நிலையில் நேற்று தேர்தல் வன்முறைக் கண்காணிப்புக் குழுவினர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

சமூகத்தில் நிலவுகின்ற வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு வாய்ந்த இவ்விருசாராரும் சுதந்திர மானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு உரிய வழிவகைகளை உருவாக்கித் தரவேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு வேட்பாளரும் தமது கட்சி பிரசாரத்தை இயல்பான முறையில் மேற்கொள்வதற்கு வழி விட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-61,4)

## தவக்கால சிந்தனை-09

ஜானுக்கு படிக்க வேண்டுமென்ற ஆசை. என்ன செய்ய? போதிய பணம் இல்லை. பணம் கட்ட முடியவில்லை. பெற்றோர்கள் கைவிட்ட நிலையில் அந்த ஊரிலுள்ள மக்கள் அனைவரும் சேர்ந்து, ஜான் படிக்க உதவினார்கள். கல்லூரியில் படிக்க விரும்பினான். மக்கள் உதவினார்கள். ஆட்சித்துறைக்காக படிக்கவும் விரும்பினான். ஊர் மக்கள் ஒன்று கூடி, தங்கள் உழைப்பில் ஒரு பகுதியை இவனுடைய படிப்பிற்கு ஒதுக்கினார்கள். இதோ! ஆட்சியர் ஆனான். அனால் பதவி, பணம், புகழ் அவனது அறிவை மறைத்தன. தனக்கு உதவி செய்த மக்களை கண்டு கொள்ளவேயில்லை. பழைய ஏற்பாட்டு நங்கை எஸ்தா பெரிய நாட்டு அரசியானாலும், அரசி என்ற மமதையில்லாமல் தன் சொந்த மக்களை மறக்கவில்லை தன் மக்களுக்காக மன்னனிடம் பல சலுகைகள் பெற்றுத்தந்தாள். யூதர்கள் துன்புறுத்தப்படும் போது கடவுளிடமும், மன்னனடமும் மன்றாடி தன் இன மக்களைக் காப்பாற்றினாள். இயேசு தான் மாட்சிமிகு கடவுளின் மகன் எனவாளா இருக்காமல தம் அன்பை வாரி வழங்கினார். நாம் நல்ல நிலையில் இருந்தால் அந்தச் செருக்கிலே பிறரை உதாசீனப்படுத்துகின்றோம். பிறர் ஒன்று கேட்க நாம் ஒன்று செய்கிறோம். பிறர் உங்களுக்கு செய்ய வேண்டுமென விரும்புவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்

MANOJ EXPRESS SERVICE

MANOJ EXPRESS
The Finest Express Service in the Field

இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.:
021 222 3916
0777 801038

கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

# பௌத்த சின்னங்களை

# பிரசார நடவடிக்கைகளுக்கு அரசியல் கட்சிகள் பயன்படுத்தக்கூடாது.

## பௌத்த உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பௌத்தமத வழிபாட்டுத் தலங்களையும், பௌத்த கொடியையும் அரசியல் கட்சிகள் பயன்படுத்த முயற்சிப்பதைத் தடுத்து நிறுத்துமாறு பௌத்த உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் பௌத்த சங்க பீட தலைமைத்துவத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பௌத்த உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஒரு மாத காலமே இருக்கின்ற நிலையில், தேர்தல் பிரசாரங்கள் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்நத அரசியல்வாதிகள் பௌத்தமத வழிபாட்டுத் தலங்களையும், பௌத்த கொடியையும் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முயற்சி எடுத்து வருகின்றனர்.

''சிஹல உறுமய'' என்ற பெயருடன் முன்னர் இருந்த கட்சி, இம்முறை பொதுத்தேர்தலுக்காக பௌத்த பிக்குமாரையும் தனது கட்சியில் இணைத்து 'ஜாதிக ஹெல உறுமய' என்ற பெயருடன் போட்டியிடவுள்ளது. இதற்கான பிரசாரங்களில் தற்போது ஈடுபட்டு வரும் இக்கட்சி பௌத்தகொடி, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பௌத்த மதம் போன்றவற்றையும் தமது பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முயற்சி எடுத்து வருகின்றனர்.

பௌத்தர்களின் சொத்தான பௌத்த மதத்தை எந்தவொரு அரசியல் கட்சிக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. எனவே பௌத்த சின்னங்களை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-18)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி. யாழ்ப்பாணம
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P : 0602212472

# பாராளுமன்றக் கதிரை...

முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழ் நிலையில் நடைபெறுகிறது. தேர்தலை இதுவரை காலமும் எதிர்த்து வந்த விடுதலைப் புலிகள் ஏன் இன்று அதனை ஆதரிக்கின்றனர் எனக் கேள்வி எழலாம். அதற்குக் காரணங்கள் இருக்கவே செய்கின்றன.

இராணுவ ரீதியில் மிகவும் பலமான நிலையில் உள்ள விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியில் மக்களின் ஆதரவு பெற்ற பிரதிநிதிகளா? என்பதை சர்வதேசம் ஆதார பூர்வமாக நிருபணமாக்கிக்கொள்ள முயல்கிறது. இந்த நிலையில், சர்வதேசததின் எதிர் பார்ப்புக்களுக்கு நாம் தகுந்த விதத்தில் பதிலளிக்க வேண்டியுள்ளது. இதற்கான ஒரே வழி பொதுத்தேர்தலை எதிர்கொள்வதே.

ஆனால், தமிழ்மக்கள் வாக்களிப்பதன்மூலம் பாராளுமன்றத்திற்குச் செல்லும் பிரதிநிதிகள் அங்கு தமிழ்மக்களுக்கு எந்த விடிவையும் பெற்றுத்தரமுடியாது என்றார்.

நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் அங்கு உரையாற்றுகையில்,

பயங்கரவாதிகள் என்று விடுதலைப் புலிகளை நாடு நாடாக ஓடித்திரிந்து தடைசெய்த லக்ஷ்மன் கதிர்காமர் இன்று விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசுவோம் என்று கூறுகிறார். இத்தகையதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது விடுதலைப் புலிகளின் உறுதி தளராத ஆயுதப்போராட்டமே.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பலம்பெற்று அரசியல் ரீதியிலும் பலம் பெறுவதை ஜனாதிபதி சந்திரிகாவினால் பொறுத்துக் கொள்ளமுடியாமல் போய்விட் டது.

இதனாலேயே விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால சபைத் திட்டவரைபுடன் அமைச்சுக்களைப் பறித்த ஜனாதிபதி பாராளுமன்றத்தையும் கலைத்தார்.

பாராளு மன்றத்தைக் கலைக்க வேண்டாம் என இந்தியா தனது தூதுவர் மூலம் ஜனாதிபதியைப் பலதடவைகள் கேட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி அதனைக் காதில் விழுத்தாமல் தேர்தலை அறிவித்தார்.

அந்தத் தேர்தலை விடுதலைப் புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தவுள்ளனர். இதுவே யதார்த்தமான நிலை.

நாம் இன்று மிகவும் முக்கியமானதொரு காலகட்டத்தில் இருக்கின்றோம். நாம் அழைக்கின்றபோது அமெரிக்காவையும், இந்தியாவையும் தவிர ஏனைய நாடுகள் அனைத்தும் இன்று கிளிநொச்சிக்கு வருகின்றன. இவ்வளவு தூரம் உலக நாடுகளிடம் வரவேற்பைப் பெற்றுள்ள விடுதலைப் புலிகளுக்குத் தற்காலச் சூழ்நிலையின் அடிப்படையில் மக்களின் ஆதரவு உண்டா என அவை எடை போட முயல்கின்றன

அதற்குப் பதிலளிக்கும் முகமாகவே விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் இத்தேர்தலைப் பயன்படுத்த முயல்கின்றதே தவிர பாராளுமன்றக் கதிரைகள் தமிழ்மக்களுக்கு விடிவைத் தராது என்பதை விடுதலைப் புலிகள் மட்டுமல்ல தமிழ் மக்களும் எப்போதே உணர்ந்து விட்டனர். இவ்வாறு ஈஸ்வரன் தெரிவித்தார்.

(ந-51,5)

# தமிழீழ விடுத...

படிக்கையை மாற்றியமைக்க வேண்டுமென லக்ஷ்மன் கதிர் காமர் கூற அந்த உடன்படிக்கையைக் கிழித் தெறியவேண்டுமென ஜே.வி.பியின் விமல் வீரவன்ச கூறுகிறார்.

இப்போது உடன்படிக்கையை மாறறியமைக்க வேண்டுமெனக் கூறியவர்களும் கிழித்தெறிய வேண்டுமெனக் கூறியவர்களும் கூட்டாக தேர்தலில் நிற்கின்றனர். இதனால் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கும் சமாதான முயற்சிக்கும் பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மக்கள் ஆணை பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகளின் சுவடுகளில் புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தடம் பதிக்க முயல்கிறது என்றும் ராஜித கூறினார். (த)

# ஜே.வி.பியினர்...

னணி அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனாலேயே கூட்டணி அமைப்பதில் தாமதங்கள் ஏற்பட்டன. இதனை எதிர்த்தவர்களே கூட்டணி பற்றிய தேவையற்ற கட்டுக்கதைகளைப் பரப்புவ தோடு ஜனாதிபதியையும் குழப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இக்கூட்டணி அரசாங்கம் அமைத்தால் ஜே.வி.பிக்கு 4 அமைச்சுப் பொறுப்புகளும் 8பிரதிஅமைச்சுப் பொறுப்புகளும் வழங்கப்படும். அதில் ஒரு அமைச்சரும் 2 பிரதி அமைச்சர்களும் ஜே.வி.பி. சார்பில் களுத்துறை மாவட்டத்தில் இருந்து நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ந-6)

# மேலும் இரு...

உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளதால் தான் இம்முடிவை எடுத்துள்ளதாக மனோகரன் அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளர்களில் நேற்றுவரை 4 வேட்பாளர்கள் இராஜினாமாச் செய்துள்ளமையும் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

# ஜனாதிபதித்...

ஜே.வி.பியின் ஆதரவைக் கோரியுள்ளேன். கொடிய எதிரிகூட நல்ல நண்பனாக மாறலாம் என நான் நம்புகிறேன். இதற்கு எனக்கு உரிமை உண்டு. என்னுடைய கொள்கை திறந்த பொருளாதாரம், வெளிநாட்டு முதலீடுகள் என்பவற்றை அனுமதிப்பதாகும். நான் ஒரு மாக்ஸிஸவாதி அல்ல என்றார்.

27 ஆண்டுகால அரசியல் வாழ்வில் பெரும்பாலும் எதிர்க்கட்சியிலேயே இருந்ததால் ஏமாற்றம் அடைந்துள்ளீர்களா எனக் கேட்டதற்கு நான் ஒரு கௌரவமான அரசியல்வாதி. பதவிகளுக்காக ஆசைப்படுபவன் அல்ல.

நான் ஐ.தே.கட்சியில் 1993இல் சேர இருந்தபோது 1994இல் அக் கட்சி தேர்தலில் தோற்க இருந்தது எனக்குத் தெரியும். இதேபோல 2001 ஆம் ஆண்டில் தேர்தலில் பொ.ஐ.முன்னணி தோற்க இருந்தது பற்றித் தெரிந்துகெண்டே 2000ல் பொ.ஐ.முன்னணியுடன் மீண்டும் இணைந்துகொண்டேன் எனக்கூறினார்.

1993இல் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பத்திரிகைகளுக்குத் தெரிவித்த கருத்தில் 'அநுராவின் சோதிடப்பலனின் படி அவருக்கு இராஜயோகம் இல்லை எனக் கூறியுள்ளாரே எனக் கேட்டதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

நான் பகவான் சத்தியசாயி பாபாவின் தீவிர பக்தன். பாபா எனக்குத் தனது ஆசிகளை வழங்கியுள்ளார். பாபாவே எனது வழி காட்டி என்று தெரிவித்த அநுரா, கடந்தவாரம் 10 நிமிடங்கள் நான் பாபாவுடன் தொலைபேசியில் பேசியிருந்தேன். அப்போது அவர் எனக்குப் பல்வேறு அதிசயங்களைக காட்டியிருந்தார். அவற்றை நான் பத்திரிகைகளுக்கு வெளியிடமாட்டேன் என்றும் கூறினார். (ந)


# அறிவித்தல்

## பாராளுமன்ற பொதுத்தேர்தல் — 2004

## தேர்தல் மாவட்ட இல. 10 - யாழ்ப்பாணம்.

**சகல சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும்**

தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட எனது 2004.02.23 ஆம் திகதிய கடிதத்திற்கு மேலதிகமாக தேர்தல் கடமைக்காக சொந்த / இரவல் / வாடகை வாகனங்களைப் பயன்படுத்துவது பற்றிய விபரம் கீழ் வருமாறு:

1. வாகனங்கள் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.
2. இரவல் / வாடகை வாகனங்களாயின் அவை இம்மாவட்டத்தில் உள்ளவையாக இருக்க வேண்டும்.
3. வாகனத்திற்கு பூரண காப்புறுதி இருக்க வேண்டும். இல்லாதவிடத்து இரு வாரத்திற்கென குழப்பம், கலவரங்கள் என்பவற்றுக்கு ஏற்ற காப்புறுதி பெறவேண்டும்.
4. வாகனத்திற்கான கொடுப்பனவு: (ஒரு கிலோமீற்றருக்கான கொடுப்பனவு)

| வாகனம் | பெற்றோல் | டீசல் |
|---|---|---|
| 4முதல்7 வரையான ஆசன வசதி | 19.00 | 16.00 |
| 8முதல்14 வரையான ஆசன வசதி | 24.00 | 20.00 |

மற்றும் வாகனம் தரித்து நிற்கும் காலத்திற்கும் கீழ் வருமாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

✦ 8 ஆசனத்திற்கு குறைவான வாகனம் - மணித்தியாலத்திற்கு ரூ. 7.50
✦ 8 ஆசனத்திற்குக் கூடிய வாகனம் - மணித்தியாலத்திற்கு ரூ. 15.00

5. இத்துடன் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படும் காலப்பகுதியுள் 50 கி.மீ.அதிகமாக செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் 50 கி.மீருக்கான ஆகக் குறைந்த கொடுப்பனவு வழங்கப்படும்.
6. வாடகைக்கு அமர்த்திய பின் இயந்திரக்கோளாறு ஏற்பட்டால் எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.
7. தங்களுக்கு ஏற்கனவே அனுப்பிய விண்ணப்பப் படிவத்துடன் வருடாந்த வாகனவரி அனுமதிப் பத்திரம், காப்புறுதி சான்றிதழின் புகைப்படப் பிரதிகளை இணைத்து அனுப்பவும்.
8. வாகனங்கள் தேர்தல் நடைபெறும் திகதியிலிருந்து இரு நாட்களுக்கு முன் பொறுப்பேற்கப்படுவதுடன் தேர்தல் முடிவடையும் திகதிக்கு அடுத்த நாள் விடுவிக்கப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலர்.
தேர்தல் மாவட்டம் இல.10. யாழ்ப்பாணம்.

(C/7408)



# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி நடனத்துறை கல்வியியலாளர்
**திருமதி புவனேஸ்வரி வேல்நிதி**
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி கனகசிங்கம் சோதிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்ப உறவுகளோடு இணைகின்றோம்.
*அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்*

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்

(8423)



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின
பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு
20 கிராம மாதர் சங்கங்கள், மாதர் குழுக்களுடன் இணைந்து நடத்துகின்ற

## சர்வதேச மகளிர் தினம் — 2004



"பெண்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்"

-ஆய்வுரைகள்
-நாடக அரங்கு
-கவியரங்கு
-கருத்துப் பரிமாற்றங்கள்
-ஆக்கபூர்வமான முன்மொழிவுகள

காலம் - 08.03.2004
இடம் - நாவலர் மண்டபம்
நாவலர் வீதி, நல்லூர்.

**பெண்கள் தங்கள் பலத்தில் தங்கி வாழ வேண்டும் என்று தூய மனதோடு விரும்புகின்றவர்களை இந்த நிகழ்வில் பங்கு கொள்ள அழைக்கின்றோம்.**

*எங்கள் பலத்தில் தங்கி நிற்போம் நாங்கள்*

பெண்கள் அபிவிருத்திப் பிரிவு TRRO
106. 4ம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம்.

(C/7375)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.